Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் –12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–04 | 19–07–2004 | திங்கட்கிழமை | ஓசை –152

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.- 024–2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-9943)

# யுத்தத்தை ஆரம்பிப்பது எமது கைகளில் இல்லை

# முடிவு சந்திரிகாவின் கைகளிலேயே உள்ளது

## மட்டு – அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் ரமேஷ்

(அலுவலக செய்தியாளர்)



**சண்டையை ஆரம்பிப்பது எமது கைகளில் இல்லை. சண்டையைத் தொடர்வதா? இல்லையா? என்பதை முடிவுசெய்வது சந்திரிகாதான். எங்கள் தலைவர் சமாதானம் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் என மட்டு -அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் அவர்கள் தெரிவித்துள்ளார்.**

ஈழநாதம் நாளேட்டுக்கு நேற்று அவர் வழங்கிய சிறப்புச் செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். தற்போது யுத்தத்திற்கான நகர்வு இருப்பதாகக் கூறும்போது சந்திரிகா தனது ஆட்சியைத் தக்க வைக்க அப்படியான வழிமுறையைக் கையாள்வார் போலவே தெரிகிறது.

அரசியல் ரீதியாகப் பார்க்கும் போது சந்திரிகா அரசைப் பொறுத்தவரையில் அது ஒரு வலுவிழந்த அரசாங்கமாகவேதான் இருக்கிறது. எனவேதான் பாராளுமன்றத்தை எப்படிப் பலமாக்குவது? தனது ஆட்சியை எப்படித் தக்கவைப்பது? தான் பிரதமராவதற்கு பாராளுமன்றத்தை வைத்து அரசியல் யாப்பை எப்படி .மாற்றம் செய்யலாம்? அதற்கான ஆதரவை எப்படிப் பெறலாம்? அதற்காகச் சண்டை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் நினைவுமண்டபம் அமைக்க சிறிலங்காப் படையினர் முட்டுக்கட்டை

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயப் பகுதியில் கரும்புலிகள் ஞாபகார்த்த மண்டபமொன்றினை அமைக்கும் பணிகளைத் தடுத்து நிறுத்த படைத்தரப்பு கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக 1996ஆம் ஆண்டு யாழ் குடாநாடு படையினரால் கைப்பற்றப் பட்ட வேளை இப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த கரும்புலிகள் ஞாபகார்த்த நினைவு மண்டபம் இடித்து நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அதே பகுதியில் மீண்டும் கரும் புலிகள் ஞாபகார்த்த நினைவு மண்டபத்தை நிறுவ பொதுமக்களை பிரதிநிதிகளாகக் கொண்ட ஏற்பாட்டுக்குழு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

கட்டப்படவுள்ள நினைவு மண்டபத்தினது மாதிரி வடிவினையும், கடந்த 5ஆம் திகதி அனுஷ்டிக்கப் பட்ட கரும்புலிகள் தினத்தன்று அப் பகுதியில் நிறுவியிருந்தனர். இந் நிலையில் படை அதிகாரிகள் சிலர் பாடசாலை முன்றலில் இதற்கான

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு பாதுகாப்பு வழங்குக ஈ.பி.டி.பி சந்திரிகாவிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவிற்கு சிறிலங்கா அரசாங்கம் தகுந்த பாதுகாப்பை வழங்கவேண்டும் என ஈ.பி.டி.பி கோரியுள்ளது.

இவ்விடயம் குறித்து தாம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதாக ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது. கடந்த வாரம் மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணாவின் ஊடகப் பேச்சாளராகக் கடமையாற்றிய மாறன் என்ற சச்சி மாஸ்டர் கொலை செய்யப் பட்டதையடுத்தே இக்கோரிக்கையைத் தாம் அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக ஈ.பி.டி.பி கூறியுள்ளது.

## அரசு புலிகள் சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும்

### இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாக இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் தெரிவிக்கின்றார்.

இது விடயத்தில் இந்திய நிலைப் பாட்டில் எதுவித மாறுதலும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்த பின்னர் கொழும்பு தனியார் வானொலியின் நிருபருக்கு புதுடில்லியில் வைத்து வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். பிரதமராகப் பதவியேற்ற பின்னர் இந்தியாவிற்கான முதலாவது உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் மாலை புறப்பட்டுச்சென்றார். இந்த விஜயத்தில் அமைச்சர்களான ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே (12 ஆம் பக்கம் பார்க்க)

## டக்ளஸ் தேவானந்தாவின் அறிவிப்பால் கொழும்புப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

### சிறிலங்கா புலனாய்வுத்துறை எச்சரிக்கை

கருணாவுக்கு தாம் ஆதரவு வழங்குவதாக ஈழ மக்கள் சனநாயககட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா அறிவித்துள்ளதை அடுத்து கொழும்பின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்காப் புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர். எனவே கொழும்பின் பல பகுதிகளில் குண்டு வெடிப்புத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என அந்த எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை கருணா,டக்ளஸ் தேவானந்தா மற்றும் கருணாவின் ஆயுத உறுப்பினர்கள் ஆகியோரை இலக்கு வைத்து கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் அம்பாறைப் பகுதிகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் 10 பேரை உள்ளடக்கிய சுமார் 4 தற்கொலைக் குழுக்களை அனுப்பி வைத்திருப்பதாகவும் புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர். (32)

## வவு.கல்வியற் கல்லூரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(செட்டிகுளம்)

வவுனியா பூந்தோட்டம் கல்வியற்கல்லூரி மாணவர்கள் நேற்று வகுப்புப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினம் இரவு கல்வியற்கல்லூரியைச் சேர்ந்த மாணவன் எம் ஜயதிஸ்ஸ என்பவர் இனந் தெரியாத மாணவர்களால் கை. கால், முகம் என்பன கட்டப்பட்டு விட்டுச சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் நேற்றுக்காலை தண்ணீர் தாங்கியடியில் இருந்து மயக்கமான நிலையில் மீட்கப்பட்டு வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதனையடுத்தே மாணவர்கள் இந்தப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிங்கள மாணவர்கள் தமக்குப் பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஏற்கனவே உணவுப் பிரச்சினையில் மாணவர்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்ட சமயமும் சிங்கள மாணவர்கள் தமக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நீதிமன்ற நினைவுக்கல்லுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கல்

நேற்று சனிக்கிழமை நள்ளிரவு வேளையில் பிடுங்கிச் செல்லப் பட்ட யாழ். நீதிமன்ற வளாகத்திற்கான நினைவு நடுகல் மீட்கப்பட்டு மீண்டும் சொந்த இடத்தில் நிறுவப் பட்டுள்ளது.

நேற்று நள்ளிரவு வேளையில் இனந்தெரியாதவர்களால் அங்கிருந்து பிடுங்கி அகற்றப்பட் டிருந்த இந் நினைவு நடுகல் பின்னர் நல்லூர் பகுதியிலுள்ள வீதியொன்றில் வீசப்பட்டிருந்தது. இது தொடர்பாக யாழ். பொலிசாருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## பாரம்பரிய கலைநிகழ்வுகளின் அணிவகுப்புடன் சிறப்புற நடைபெற்ற முல்லை வெற்றி விழா

(அலுவலக செய்தியாளர்)

ஓயாத அலைகள்-01 இராணுவ நடவடிக்கை மூலம் சிங்களப்படைகளின் முல்லைத் தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் எட்டாம் ஆண்டு நிறைவு நாள் நேற்று முல்லை நகரில் வெகு சிறப்பாக நடைபெற்றது.


தேசிய எழுச்சிப் பேரவையினாலும் முல்லை வாழ் மக்கள் அமைப்பாலும் ஒழுங்கு படுத்தப்பட்ட வெற்றி விழா நிகழ்வு நேற்று மாலை5.00 மணிக்கு முல்லை நகரப் பெருந்தெருக்கள் திணைக்கள சந்தியில் இருந்து தமிழர்களின் பாரம்பரிய கலை நிகழ்வுகளான காவடி, கரகம், கும்மி, குடமுருட்டி, கம்படி. குதிரையாட்டம் போன்ற நிகழ்வுகளுடன் முல்லை பொது விளையாட்டு மைதானத்துக்கு ஊர்வலம் வந்தடைந்தது.

ஊர்வல வருகையைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை கடற்புலிகளின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான மங்களேஸ் ஏற்றி வைத்தார். பொதுச்சுடரை


(12 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லை பெருந்தள வெற்றிவிழா











படங்கள்:-லோகீசன்,சசிக்குமார்.


## வரிவிளம்பரம்

### தவறி விட்டது

29.06.04 ஆம் திகதியன்று சம்பளப்பணம், ஆவணங்கள், உடுப்பு, புழுக்கொடியல் பாக் என்பவற்றுடன் பொலித்தீன் பொதியொன்று மீசாலையிலிருந்து முகமாலையூடாக வரும் மினி பஸ்சில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்களை ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

T.p 024,2221513,தகவல் சு.பாலவிநாயகமூர்த்தி,வலயக் கல்வி அலுவலகம்,வவுனியா வடக்கு, வவுனியா. (சி.10030)

IMT+GUDWIL

### உழவு இயந்திரம் விற்பனைக்கு உண்டு

IMT உழவு இயந்திரம் பெட்டியுடனும் GUDWIl உழவு இயந்திரம் பெட்டியுடனும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சிவன்வீதி, உரும்பிராய் கிழக்கு. தகவல் செ. திருச்செல்வம். (4822)

### தவறி விட்டது

முருகேசு- வைகுந்தவாசன் ஆகிய எனது அடையாள அட்டை (571994089.V) 22.02.2004 இல் புளியங்குளத்துக்கும்- புதுக்குடியிருப்புக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். (4667)


## மின்சார விநியோக நேர மாற்றம்

கிளிநொச்சி நகர மின் பாவனையாளர்களின் வேண்டுகோளிறகிணங்க மின்சாரசபை தனது விநியோக சேவையை இன்று தொடக்கம் மாற்றம் செய்துள்ளது.

* காலை 06.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணிவரை
* நண்பகல் 12.30 மணி தொடக்கம் மாலை 05.00 மணிவரை
* மாலை 05.30 மணி தொடக்கம் இரவு 11.00 மணிவரை

## தாதிகள் இன்றி இயங்கும் மருத்துவமனை

(மல்லாவி)

நட்டாங்கண்டல் மகப்பேற்று மருத்துவமனையில் மருத்துவ தாதிகள் இன்றியும் சிற்றூழியர்கள் இல்லாமலும் இயங்கிவருகின்றது.

மேற்படி மகப்பேற்று மருத்துவமனை கடந்த காலங்களில் இடம்பெற்ற ஜெயசிக்குறு இராணு நடவடிக்கையினால் அழிவுக்குள்ளானது.

தற்பொழுது இவ் வைத்தியசாலை யூ.என்.எச்.சீ.ஆர் நிதியுதவியுடன் ஒருபகுதி புனரமைக்கப்பட்டு இயங்கிவருகின்றது. ஆனால் இங்கு மருத்துவ தாதிகள் மற்றும் சிற்றூழியர்கள் இல்லாமலும் இருந்துவரும் நிலையுடன் வைத்தியர் தங்கும் விடுதியும், இல்லாமல் இருப்பதால் பல சிரமங்களை வைத்தியர்கள் எதிர்நோக்கி வருகின்றனர். (24)

## கிளி.முல்லை மறைக் கோட்ட இளைஞர் தினப் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளி, முல்லை மறைக்கோட்ட இளைஞர் தின போட்டியின் கிளிநொச்சி வலயங்களுக்கு உட்பட்ட இளைஞர்களுக்கான போட்டிகள் நேற்று சிறப்புற நடைபெற்றன.

முதல் போட்டியாக மைதான நிகழ்வுகள் இடம் பெற்றன. இவை கிளிநொச்சி கனகபுரம் பாடசாலை மைதானத்தில் காலை தேசியக் கொடியேற்றல் நிகழ்வுடன் ஆரம்பமாகின.

முதல் போட்டியாக உதைபந்தாட்டப் போட்டி இடம் பெற்றது. இதில் உருத்திரபுர அணியை எதிர்த்து தருமபுர அணி மோதியது. இதில் தருமபுர அணி வெற்றி பெற்றது. அத்துடன் பெண்களுக்கான கிளித்தட்டு போட்டியில் தருமபுர அணியை எதிர்த்து கிளிநொச்சி இளையோர் ஒன்றிய பெண்கள் அணி மோதியது. இதில் கிளிநொச்சி அணி வெற்றி பெற்றது.

அத்துடன் மேடை நிகழ்வுகள் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இடம் பெற்றன இதில் கிளிநொச்சி வலய அனைத்து பங்குத்தந்தை பிரிவுக்கும் உட்பட்ட இளைஞர்களுடைய நாடகப் போட்டி, பாடல் போட்டி, வினாடிவினாப் போட்டி, கையெழுத்து சஞ்சிகை போன்ற போட்டிகள் இடம் பெற்றன.

இவ் கிளி, முல்லை மறைக் கோட்ட இளைஞர்களிற்குரிய போட்டிகள் முழங்காவில்வலயம், முல்லைத்தீவு வலயங்களில் ஏற்கனவே போட்டிகள் நடந்து முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

# ஈராக் அபுகிறைய் சிறைச்சாலை சித்திரவதை புதிய திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின

(பாக்தாத்)

**ஈராக் அபுகிறைய் சிறைச்சாலை தொடர்பான மனிதநேயமற்ற புதிய சம்பவங்கள் வெளிவந்துள்ளன. அமெரிக்க செனட் இராணுவப் பணிக்குழு உறுப்பினர்கள் பென்டகன் அதிகாரிகளை சந்தித்துள்ளனர். மூடிய அறைக்குள் இந்தச் சந்திப்பு நடந்துள்ளது.**

இதன்போது பென்டகன் அதிகாரிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அனுப்பிய நம்பகத் தன்மை வாய்ந்த 24 ஆவணங்களை செனட் இராணுவப் பணிக் குழு உறுப்பினர்களிடம் காட்டியுள்ளனர்.

ஈராக் சிறைச்சாலைகளில் கைதிகள் நடத்தப்பட்ட விதம் குறித்து இந்த ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அபகிறைய் சிறைச்சாலைச் சம்பவங்கள் வெளியுலகிற்குத் தெரிவதற்கு முன்னர், இந்த ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது குறித்து செனட் இராணுவ பணிக் குழுவின் தலைவர் வார்னர் கூறுகையில் ஈராக் கைதிகள் விடயத்தில் ஜெனீவா ஒப்பந்தம் அதிகளவில் மீறப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

அபுகிறைய் சிறைச்சாலையில் அமெரிக்க படையினர் நடத்திய மனிதநேயமற்ற கொடுமைகள் வெளியுலகிற்கு வெளிவந்து மூன்று மாதங்கள் முடிந்துள்ள பின்னர் புதிதாக இச் சம்பவங்கள் வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ருகொலொற்றா துவில் ஏற்பட்ட காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த காட்டிலாகா உலங்கு வானூர்திகள் நீரை வீசுறுகின்றன

# இஸ்ரேலுடனான உறவை நியூசிலாந்து துண்டித்தது புதிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்

**-இஸ்ரேல் பாராளு. எதிர்க்கட்சி உறுப்பினர்**

இஸ்ரேலுடனான தனது உறவுகளை நியூசிலாந்து துண்டித்துள்ளது. இதனை நியூசிலாந்தின் பிரதமர் அலன்கிளார்க் அறிவித்துள்ளார்.

ஆனால் நியூசிலாந்தின் இந்த முடிவு பல புதிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென்று இஸ்ரேல் பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர் நஸப் ஷெகாவல் கலோன் கூறியுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் நியூசிலாந்து கடவுச்சீட்டுக்கள் வைத்திருந்த இஸ்ரேலிய மெஷாட் உளவாளிகள் இருவரை நியூசிலாந்து பொலிசார் கைது செய்தனர். நீதிமன்றம் இவர்களுக்கு ஆறுமாத சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இதனையடுத்தே இஸ்ரேலுடன் தனது உறவுகளை துண்டித்துக் கொண்டுள்ளதாக நியூசிலாந்து அறிவித்துள்ளது. ஆனால் கைது செய்யப்பட்ட இருவரும் மெஷாரப்பின் உளவாளிகலல்ல என்று கூறியுள்ள இஸ்ரேல் இதற்காக மன்னிப்புக் கோரமுடியாது என்றும்,

நியூசிலாந்தின் இந்தக்குற்றச் சாட்டிற்கு எந்தவித ஆதாரமும் இல்லை என்றும் அதனால் இஸ்ரேலுடனான உறவுகளைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

ஆனால் இஸ்ரேல் மன்னிப்புக் கோராதவரை இஸ்ரேலுடன் உறவுகளை மீட்டெடுக்க முடியாது என்று கூறியுள்ள நியூசிலாந்துப் பிரதமர் தனது இஸ்ரேல் பயணத்தையும் இரத்துச் செய்துள்ளார்.

இதேவேளை இஸ்ரேலின் உயர்பிரதிநிதிகள் நியூசிலாந்திற்கு வருவதானால் முறையாக விண்ணப்பம் பூர்த்தி செய்து கடவுச் சீட்டினைப்பெற்றே இனிவரவேண்டும் என்றும் நியூசிலாந்து கடுமையான விதிமுறைகளை அமுலாக்கியுமுள்ளது.



ஈராக்கிய நீதியமைச்சர் மலெக் டொகன் அல்கசன் இற்குச் சொந்தமான வாகனம் பாக்தாத்தில் நடைபெற்ற தாக்குதல் ஒன்றில் எரிகின்றது. இத்தாக்குதலில் இவரின் மருமகன் உட்பட மூன்று மெய்ப்பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர்.

# தெற்காசிய நாடுகளுடனான நட்புறவு பெருமைக்குரியது- கொலின் பவல்

தெற்காசிய நாடுகளுடன் நாங்கள் ஏற்படுத்தியுள்ள சுமூக உறவுகளை நினைத்து நாம் பெருமையடைகின்றோம்.

இவ்வாறு அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் கொலின் பவல் அமெரிக்க சமாதானக் கழகத்தில் உரையாற்றும் போது கூறியிருக்கின்றார்.

ஈராக் மக்களுக்கு நன்மை பயக்கத்தக்க பல திட்டங்கள் பற்றியும் எடுத்துரைத்த அவர்,

தெற்காசியாவில் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் என்று மட்டுமல்லாது முன்பு இரும்புத்திரைக்குப் பின்னிருந்த நாடுகளும் இப்போது அமெரிக்காவுடன் நல்லுறவு கொண்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இந்தியாவுடனும் பாகிஸ்தானுடனும் நாங்கள் தனித்தனியாகக் கொண்டுள்ள உறவு தனித்தன்மை வாய்ந்தவை. நாங்கள் இரு நாடுகளையும் மதிக்கின்றோம்.

அதற்காக இரு நாடுகள் மீதும் சம அளவிலான அக்கறைதான் எமக்குண்டு. இருநாடுகளும் தமக்கிடையே சமாதான நல்வாழ்வை எதிர்கொள்வதே எமது அக்கறையும் ஆகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

# நீண்ட தூர ஏவுகணை தொழில் நுட்பத்தை வடகொரியாவிடம் இருந்தே பெற்றது பாகிஸ்தான்

பாகிஸ்தான் நீண்ட தூர தொழில் நுட்பத்தை வடகொரியாவிடமிருந்தே பெற்றுள்ளது என்று பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ கூறியுள்ளார்.

ஆனால் பாகிஸ்தான் தனது அணுவாயுத தொழில் நுட்பம் குறித்து வடகொரியாவுடன் எவ்வித தகவலையும் பரிமாறிக் கொள்ளவில்லை என்று பெனாஸிர் பூட்டோவை மேற்கோள் காட்டி ஜப்பானிய நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அன்னியச் செலவாணியைப் பெறுவதற்காக அணுவாயுத தொழில் நுட்பத்தை ஏனைய நாடுகளுக்கு விற்கலாமென்று தாம் பிரதமராக இருந்த போது, சிலர் யோசனைகள் தெரிவித்த போதும் அதற்கு தாம் சம்மதம் கூறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# அமெரிக்க விமானப் பொறியியலாளர் படுகொலை அல்-ஹைதா இணையத்தளத்தில் வெளியிட்டது

அமெரிக்காவின் விமானப் பொறியியலாளர் போல் ஜாங்ஷனைப் படுகொலை செய்த கொடூர காட்சிகளை அல்-ஹைதா தீவிரவாதிகள் இணையத்தளத்தினூடாக நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளனர்.

“குழந்தைகளும் இளகிய மனம் படைத்தவர்களும் இந்தக் காட்சிகளைப் பார்க்க வேண்டாம்” என்றும் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

ஈராக்கில் விமானப் பொறியியலாளராகக் கடமை புரிந்துவந்த அமெரிக்கர் போல்ஜாங்ஷன் கடந்த ஜூன் மாதம் அல்-ஹைதா தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

சவுதி அரேபியச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இஸ்லாமியத் தீவிரவாதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் இல்லையெனில் போல்ஜாங்ஷன் படுகொலை செய்யப்படுவர் என்றும எச்சரிக்கை செய்திருந்தனர்.

ஆனால் சவுதி அரேபியா இஸ்லாமியத் தீவிரவாதிகளை விடுதலைசெய்ய மறுத்துவிடவே போல் ஜாங்ஷன் படுகொலை செய்யப்பட்டதாக அல்-ஹைதா அறிவித்திருந்தது.

நேற்று முன்தினம் போல் ஜாங்ஷனின் கழுத்தை அறுத்துப் படுகொலை செய்யப்பட்ட கொடூர காட்சிகளை இணையத்தளமூடாக வெளியிட்டுள்ளது.




சிட்னியில் நிலவிய மூர்க்கமான காலநிலையின் பின் சண்டே பொண்டி கடற்கரையில் அலை பாறையுடன் மோதுகின்றது. இரவில் ஏற்பட்ட இம் மூர்க்கமான காலநிலையினால் சிட்னியில் மரங்கள் வேருடன் சாய்ந்ததுடன் மின்சார இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டன.

# பாகிஸ்தான் ஒரு மகத்தான நாடு என்பதை உறுதி செய்ய தீவிரவாதிகளை ஒழிக்கவேண்டும்

*-ரிச்சட் ஆர்மிரேச்*

பாகிஸ்தான் ஒரு மகத்தான நாடு அதற்கு வளமான எதிர்காலம் காத்திருக்கின்றது. அதனை உறுதி செய்வதற்கு அங்குள்ள தீவிரவாதிகளின் முகாம்களை அழித்துவிட்டால் நன்றாக இருக்கும்.

இவ்வாறு அமெரிக்க பாதுகாப்பு துணை அமைச்சர் றிச்சட் ஆர்மிரேச் பாகிஸ்தான் விஜயத்தின் போது அங்கு கூறியுள்ளார். ஆனால் உளவுத்துறையின் தவறான தகவலின் அடிப்படையில் கூறப்பட்ட தவறான செய்தி இது என்று பாகிஸ்தான் வெளியுறவுத் துறை அமைச்சர் கசூரி மறுப்புக் கூறியுள்ளார். ஆர்மிரேச் இந்தக் கருத்தை பாகிஸ்தானில் வெளியிடும் போது பாகிஸ்தான் வெளியுறவுத் துறைச் செயலர் றியாஸ் கொக்கரும் அருகில் இருந்த போதும அவர் மறுப்பு எதுவும் கூறவில்லை. எந்த சக்தியும் பாகிஸ்தான் மண்ணை தவறாகப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்க மாட்டோம். என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பின் கூழுரையை சுட்டிக்காட்டியுள்ள கசூரி, தனது ஆட்சேபனையை நேரடியாகவும் றியாஸ் கொக்கர் மூலமும் ஆர்மிரேச்சிடமும் தெரியப்படுத்தியுள்ளார். பாகிஸ் தான் உட்பகுதியிலேயோ எல்லையோரமாகவோ எந்தவிதமான திவிரவாதப் பயிற்சிமுகாம்களும் இல்லை என்று மறுத்துள்ள றியாஸ்கொக்டர் நலிந்துபோயுள்ள அமெரிக்க உள்துறை தகவல்களை கொண்டு தவறான கருத்துக்களைக் கூறக்கூடாது என்றும் நடுவு நிலையில் பேசவேண்டும் என்றும் கூறியுள்ளார்.



கடந்த சனிக்கிழமை கலிபோர்னியாவில் ரெமிகுலா கிழக்கில் உள்ள ருகொலோற்ரா ஸ்பிறிங்ஸ் எனும் இடத்தில் காட்டுத்தீயினால் ஏற்பட்ட புகை வானத்தை நிரப்புகின்றத.

# இலங்கை அகதிகள் விடயத்தில் இரு அரசுகளும் கண்மூடித்தனமான போக்கை கடைப்பிடிக்கின்றன

## -மன்னார் பதில் நீதவான் கண்டனம்

(மன்னார்)

**இந்தியாவிலிருந்து இலங்கை வர விரும்பும் இலங்கை அகதிகள் தொடர்பில் இரண்டு நாட்டு அரசாங்கங்களும் கண்மூடித்தனமான போக்கைக் கடைப்பிடிப்பதாக மன்னார் பதில் நீதவான் எம்.பி.பாரூக் கண்டனம் வெளியிட்டுள்ளார்.**

இந்த நிலை தொடர்ந்தால் இந்தியாவில் இருந்து வரும் இலங்கை அகதிகள் பாரிய பிரச்சினைகளுக்கு உள்ளாக வேண்டியேற்படும் எனவும் அவர் எச்சரித்தார்.

எனவே இரண்டு அரசாங்கங்களும் உரிய முனைப்பை மேற்கொண்டு, இலங்கை அகதிகளை நாட்டுக்கு திரும்பி வர வழிவகுக்க வேண்டும் எனவும் நீதவான் கேட்டுக்கொண்டார்.

தலைமன்னார் ஊடாக கடந்த வெள்ளியன்று இலங்கைக்கு வந்த 34 அகதிகள் மறுநாள் தம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட வேளையிலேயே நீதவான் இந்த விமர்சனத்தை வெளியிட்டார்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களைச் சேர்ந்த குறிப்பிட்ட அகதிகளைத் தமது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான் பொலிசாரின் வேண்டுகோளுக்கு இணங்க அகதிகளை அழைத்து வந்ததாகக் கூறப்படும் இரண்டு இந்திய படகோட்டிகளை எதிர் வரும் 30 ஆம்திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டார்.

34 அகதிகளும் தமிழ்நாடு இதில் மண்டபம் பகுதியில் இருந்து இலங்கைக்கான பயணத்தை ஒரு படகில் மேற்கொண்டதில் 14பெண்களும், 20ஆண்களும் அடங்குவர்.

நடுக்கடலில் குறிப்பிட்ட படகு பழுதடையவே அங்கு மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரண்டு இந்தியப் படகுகளின் படகோட்டிகள் அகதிகளைத் தமது படகுகளில் அழைத்து வந்து இலங்கை கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினரிடம் கையளித்துள்ளனர்.

தாம் அகதிகளுக்கு உதவியளித்தவர்கள் என அவர்கள் தம்மை அடையாளப்படுத்திய அதே நேரம், அவர்களால் அழைத்து வரப்பட்ட அகதிகளும் அதனை உறுதிப்படுத்தி அவர்களை திரும்பி இந்தியாவுக்குச் செல்ல அனுமதிக்குமாறு கேட்டனர்.

எனினும் அதனை ஏற்றுக் கொள்ளாத கடற்படையினர் அவர்களையும் கைது செய்து மன்னார் பொலிசாரிடம் கையளித்துள்ளனர்.

இந்த நிலையில் சனிக்கிழமை நீதிமன்றத்தில் குறிப்பிட்ட இந்தியப் படகோட்டிகள் ஆஜர் செய்யப்பட்ட வேளையில் அகதிகள் அவர்கள் தம்மைக் காப்பாற்றியவர்கள் எனக் கூறியபோதும் அதனை ஆட்சேபித்த பொலிசார் தாம் அவர்கள் இருவரையும் விசாரணை செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டமையை அடுத்து இரண்டு இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (32, மி)

## புனரமைப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திர புரம் கிராமத்தில் நான்கு வீதிகள் முப்பத்திரண்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது. நியாப் திட்ட உதவியுடன் மேற்படி வீதிகளின் புனரமைப்பு இடம் பெற்றது. (19)

## புதிய கட்டடத் திறப்புவிழா



ஜப்பான் தேசத்து மக்கள் (பாஜ் நிறுவனம்) நிதியீட்டத்துடன் கிளிநொச்சி அபிவிருத்தி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் பொன்னகரில் அமைக்கப்பெற்ற கிளி. சிவபாத கலையக பாடசாலையின் புதிய கட்டடத் திறப்புவிழா எதிர் வரும் புதன்கிழமை மதியம் 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. அனைவரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் அதிபர், பெற்றோர்கள் அழைக்கின்றார்கள்.

## பேருந்து தரித்துச் செல்ல குறியீடுகளாவது தேவை!

(முள்ளியவளை)

பேருந்து நிறுத்தும் இடங்களுக்கான அடையாளக் குறியீடுகள் இல்லாமையினால் பயணிக்கச் செல்லும் பயணிகள் அவலப்படுகின்றனர்.

முள்ளியவளை பிரதான வீதிகளில் குறியீடுகள் இன்மையால் பேருந்துகளைச் சாரதி நினைத்த நினைத்த இடங்களில் நிறுத்துவதால் இடையில் உள்ள பயணிகள் ஓடிச்சென்று பேருந்துகளில் ஏறவேண்டியுள்ளதுடன் மாணவர்களும் பேருந்துகளில் சென்று தூர இடங்களில் இறங்கிநடந்து சென்று பாடசாலைகளுக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக குறியீடுகளை இட்டு பயணிகளின் அவலத்தைத் தீர்க்க வேண்டும் எனப் பயணிகள் கேட்டுள்ளனார். (ஆ)

## மாங்குளம் தியாகதீபம் திலீபன் மருத்துவமனைக்கு வைத்தியநிபுணரால் அம்பியுலன்ஸ் அன்பளிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மாங்குளம் பிரதேசத்தில் அமைந்துள்ள தியாகதீபம் திலீபன் மருத்துவ மனைக்கு அவுஸ்திரேலியாவில் புலம் பெயர்ந்து வாழும் இருதயச் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி மனமோகனால் நோயாளர் காவுவண்டி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வைபவ ரீதியாக நடைபெற்ற இந்நிகழ்வுக்கு மருத்துவ மனையின் அபிவிருத்திக் குழுத்தலைவர் சி.கணேஸ்வரன் தலைமைதாங்கினார் நிகழ்வின் பொதுச்சுடரினை மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா ஏற்றிவைக்க தியாகதீபம் திலீபனின் திருவுருவப் படத்திற்கு வைத்திய கலாநிதி திருமதி கௌரி மனமோகன் சுடரினை ஏற்றி வைத்தார். தொடர்ந்து முல்லைத் தீவுமாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், தமிழீழ சுகாதாரசேவைப் பொறுப்பாளர் அருண், முல்லை.மாவட்ட அரச சார்பற்ற இணையத்தலைவர் சிவனடியார், மாங்குளம் மகாவித்தியாலய அதிபர் விஜயகுமார் செல்வராணி முல்லை மாவட்ட அசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேளினி, முல்லை. மாவட்ட அரசியல் துறைப்பொறுப் பாளர் முகுந்தன் ஆகியோர் உரை யாற்றினார்.

இதனைத் தொடர்ந்து வைத்திய கலாநிதி மனமோகன் நோயாளர் காவுவண்டியை மருத்துவ சேவை அபிவிருத்தி குழுத்தலைவர் கணேஸ்வரனிடமும் போராளி மருத்துவர் ஜெயராணியிடமும் கையளித்தார்.

தொடர்ந்து வைத்திய கலாநிதி மனமோகன் உரை நிகழ்த்தினார் இந் நிகழ்வில் அரச, அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(ச)

## ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு

(உடையார்கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் ஆரம்ப சுகாதார நிலையத் திறப்புவிழா கடந்த வெள்ளிக்கிழமை புதுக் குடியிருப்புப் பலநோக்கு கூட்டுறவுச்சங்க பொதுமுகாமையாளர் இரத்தினசிங்கம் தலைமை வகிப்பில் இடம்பெற்றது.

இவ்வைபவத்திற்கான மங்கல விளக்கு ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியை முல்லை.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணை ஏற்றிவைத்தார்.

ஆரம்ப சுகாதார நிலையத்தின் பெயர்ப்பலகை திரைநீக்கததினை புதுககுடியிருப்புப் பிரதேச செயலர் தயானந்தா செய்து வைத்தார்.

தொடர்ந்து பிரதான கட்டடத்தின் நாடாவை வெட்டி பிரதமர் விருந்தினர் முல்லை. பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயக்குலராஜா திறந்துவைக்க கட்டட உள்ளறைத் திறப்பினை யுனிசெவ் வதிவிடப் பிரதிநிதி புறொக்கோவும, களஞ்சியறையை மாவட்டத்துணை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திறந்து வைத்தார்.

அடுத்து ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் மரம் நாட்டும் வைபவம் பல பிரமுகர்களால் மேற்கொள்ளப்பட்டது. வைபவத்தில் வரவேற்புரையை கிராமஅலுவலர் சுந்தரலிங்கம் நிகழ்த்தியதைத் தொடர்ந்து ஆரம்ப சுகாதார நிலையத்தின் தேவையையும், அவசியத்தையும் செயலுருப்பெற்றமையும் தொடர்பாக சுகாதார சேவைப்பணிமனைச் செயலர் நாகேஸவரன் முல்லை. மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர், யுனிசெவ் வதிவிடப்பிரதிநிதி புறொக்கோ, புதுக் குடியிருப்புப் பிரதேச செய லர், பிரதிமாகாண சுகாதார வேவைப் பணிப்பாளர் ஜெயக்குலராஜா, ஆகியோர் வழங்கினர். (19)

## மடுத் திருத்தல ஆவணித் திருவிழா வரும் 06 ஆம் திகதி ஆரம்பம்

மடு அன்னையின் ஆவணி மாத வருடாந்தத் திருவிழா 06 ஆம் திகதி மிகவும் அமைதியான சூழ் நிலையில் ஆரம்பமாகின்றது. ஏராளமான பக்தர்கள் மடு அன்னையின் திருப்பதி நோக்கி யாத்திரை செய்யவிருக்கிறார்கள். திருவிழாத் திருப்பலி ஆவணி மாதம் 15 ஆம் திகதி காலை 6.30 மணிக்கு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் தலைமையில் நடைபெறவுள்ளது. பேராயர் மேதகு மல்கம் ரஞ்சித், யாழ்.ஆயர் மேதகு தோமஸ்சவுந்தரநாயகம், இரத்தினபுரி ஆயர் மேதகு கெரல்ட் அன்ரனி பெரேரா ஆகியோர் இத் திருவிழாவை சிறப்பிக்கவுள்ளனர்.

மடுத் திருவிழாவிற்கு வருகின்றவர்கள் வீண் சிரமங்களைத் தவிர்க்க பெயர், அடையாள அட்டை இலக்கம், வாகன மூலப் பத்திரம்,அதன் 3 பிரதிகளுடன் வரும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.மடுத்திருப்பதியில் மது பானம் விற்றல், கொண்டு வருதல், அருந்துதல் முற்றகத் தடை செய்யப்பட்டுள்ளது. இத்திருவிழா நாட்களில் 13 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை மடு வீதி 24 மணித்தியாலங்களும் திறந்திருக்கும் எனவும் மடு உதவிப் பரிபாலகர் அருட்பணி ச.சத்தியராஜ் அறியத்தந்துள்ளார்.

### மதகு உடைந்தது

(முள்ளியவளை)

முள்ளியவளை பசீலன் பிரதான வீதியில் அமைந்துள்ள நான்கு பாலச்சந்தியில் முள்ளியவளை வித்தியானந்த கல்லூரிப் பக்கமாக இருந்து அதிவேகமாகச் சென்று கொண்டிருந்த உழவு இயந்திரம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மதகில் மோதி மதகு முற்றாக இடிந்து நாசமாகிப் போனதுடன் உழவு இயந்திர சாரதி படுகாயத்திற்குள்ளாகி வைத்தியசாலை யில் சிகிசை பெற்றுவருகின்றா. (ஆ)

## -முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில்- மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு சிகிச்சைபெறும் நோயாளர் அவலம்!

(முள்ளியவளை)

முள்ளியவளை அரசினர் வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு வருவதால் நோயாளர்கள் அவலத்துக்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையானது அப்பிரதேச மக்களின் தொகை அதிகரிப்பை அடுத்து வைத்தியசாலை தரமுயர்த்தப்பட்டுள்ள போதும் நோயாளர்களின் தொகைக்கேற்பவைத்திய சாலைக்குப் போதியமருந்து வகைகள் கிடைப்பதில்லை.

அதேவேளை வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் தகுந்த மருந்து பெறமுடியாது வேறு வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டிய அவலநிலையில் உள்ளனர். பிரதேச வைத்தியசாலைக்கென ஒதுக்கீடு செய்யப்படும் மருந்து வகைகளில் 3 வீதமான மருந்து வகைகளே மேற்படி வைத்தியசாலைக்குக் கிடைப்பதாக வைத்தியசாலை வட்டாரம் தெரிவிக்கின்றது.மருந்து வகைகளின் தேவையைக்கருத்தில் கொண்டு மருந்து வகைகளைப் பெறுவதற்குக் கோரப்பட்டாலும் அவை தாமதமாகவே கிடைப்பதாக மேற்படி வட்டாரம் தெரிவிக்கின்றது.

நோயாளர்களின் தேவையினைக் கருத்தில் கொண்டு ஒரே ஒரு வைத்திய அதிகாரி இரவு பகலாக கடமை ஆற்றுகின்ற அவல நிலை அதற்கிடையில் சம்பந் தப்பட்ட அதிகாரிகளின் கூட்டங் களுக்கு மேற்படி வைத்திய அதி காரி சென்றுவிட்டால் வைத்திய சாலையில் வைத்தியர் இன்றி நோயாளா அவலப் படுகின்றனர் என்பது தெரிந்த விடயம். 1945 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடத்தில் இன்றுவரை எதுவித புனரமைப்பும் செய்யப்படாது பாழடைந்த நிலையில் தான் வைத்தியசாலை இயங்கி வருகின்றது. மேற்படி வைத்தியசாலையில் சிறு புனரமைப்புக்காக யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கியின் நிதியுதவியுடன் முல்லைத்தீவு மாகாண சுகாதார சேவையின் ஒழுங்குபடுத்தலில் மேறகொள்ளப்படவுள்ளதாக மேற்படி வைத்தியசாலை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ஆ)

## நுழைவாயிலுக்குப் புதிதாக கதவு அமைப்பு க ல்லூரி வளாகத்திற்கு சுற்றுவேலியில்லை!

### -கிளி.நகரப் பாடசாலையின் நிலை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஒரே ஒரு பெண்கள் கல்லூரியான புனித திரேசாள் பெண்கள் கல்லூரியில் புதிதாகக் கட்டடம்ஒன்று அண்மையில் திறந்துவைக்கப் பட்டுள்ள நிலையில் கல்லூரி வளாகம்எதுவித பாதுகாப்புமின்றிக் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது,

வாயிற்கதவு புதிதாகப் பொருத்தப் பட்டும் 4 பக்கமும் வேலியடைக்கப்படாது வளாகம் திறந்த நிலையில் காணப்படுகிறது. இதனால் வெளியாட்கள் உள்நுளையவும் இயற்கைக் கடனைக் கழிக்கவும் பழைய பாடசாலைக் கூட்டம் அமைந்திருந்த பற்றைக்காடுகளைப் பயன் படுத்துவதால் மாணவர்களினதும் சுற்றாடலினதும் சுகாதாரத் திற்குப் பெரும் அச்சுறுத்தல் இருந்து வருகிறமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

# கிழக்கில் புலிகள் மீது தாக்குதல் நடத்துபவர்களை நாம் தெளிவாக இனங்கண்டிருக்கிறோம்

சிறப்புச் செவ்வி

## மட்டு- அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் ரமேஸ்

**மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ளபகுதியில் தாக்குதல் நடத்துபவர்களை நாம் சரியாக இனம் கண்டிருக்கிறோம். இவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுப்பதில் நாம் இப்போது செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம். என மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஸ் அவர்கள் தெரிவித்தார்.**

**நேற்று ஈழநாதம் நாளேட்டுக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார். அச்செவ்வி வருமாறு;**

**மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் அண்மைக்காலமாக யுத்தநிறுத்தத்தை மீறும் வகையிலான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இப்பொழுது அங்கு நிலைமை எப்படியிருக்கிறது?*

கருணாவை விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றியதன் பின்னர் கருணாவை இலங்கை இராணுவம்- இராணுவப் புலனாய்வுப் பிரிவு என்பவற்றுடன் இணைத்து இலங்கை அரசாங்கம் தான் இத்தகைய துரோகத்தனத்தை மேற்கொண்டு வருகின்றது என்பது வெளிப்படையாகவே அனைத்து மக்களுக்கும் தெரியவந்திருக்கிறது. அது எவ்வாறு தெரியவந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் அது கருணாவிடம் இருந்து தப்பி வந்து எம்மிடம் இணைந்திருக்கின்ற நிலாவினி உட்பட்ட பெண் போராளிகளின் நான்கு தளபதிகளாலும், கருணாவிடம் இருந்து தப்பி தற்போது வெளிநாடு சென்றிருக்கின்ற வரதன் ஆகியோர் வெளியிட்ட தகவல்களாலும் தெரியவந்து கொண்டிருக்கிறது.

அவர்கள் எமக்குத் தருகின்ற தகவல்கள் கருணாவின் செயற்பாடுகளை வெளிப்படுத்துகிறது. கருணா இறுதிக்கட்டத்தில் மிகவும் உச்சக்கட்டமான துரோகத்தை இராணுவம்- இராணுவப் புலனாய்வுப் பிரிவினருடன் இணைந்து செய்து கொண்டிருக்கிறார். எனவே அதனை தம்மால் ஏற்கமுடியாது. அதனைப்பார்த்து பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. அதனால் தான் நாம் அவரைவிட்டு தப்பி வந்தோம் என்று கூறுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழ்மக்கள் அதிகளவில் வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்தில் எமது போராட்டத்துக்கு-தமிழீழ தேசியப் போராட்டத்துக்கு பலம் சேர்க்கும் வகையில் மக்களும், போராளிகளும் செயற்பட்டனர். இதனைக்கட்டுப்படுத்துவதற்கு நீண்டகாலமாக இலங்கை அரசும் அதன் இராணுவப் புலனாய்வுப் பிரிவும் மிகவும் பாடுபட்டுவந்தது- இப்போதும் முயன்று வருகிறது. எனவே கருணாவை வைத்துக்கொண்டு விடுதலைப்புலிகளின் செயற்பாட்டை கிழக்கில் பலவீனப்படுத்தலாம் என்பதற்கான செயற்பாட்டை இராணுவம் மேற்கொண்டு வருகிறது. மட்டக்களப்பில் அண்மையில் எமது அரசியல் வேலை செய்யும் போராளிகள்- எமது விடுதலைப் போராட்டத்துக்கு பக்கபலமாக இருந்த விரிவுரையாளர் தம்பையா, செய்தியாளர் நடேசன் போன்றவர்களின் சாவுக்கு யார் காரணம் என்பதை பார்க்கும் போது வெறுமனவே கருணாவை மாத்திரம் சொல்லிவிடமுடியாது. கருணாவினுடைய பெயரையும் அவரின் பக்கபலத்தையும் பயன்படுத்தி இராணுவப்புலனாய்வுப்பிரிவே இதனைச் செய்ததாக எமக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்திருக்கின்றன. இதற்கு உதாரணமாக அவர்களிடம் இருந்து நாம் கைப்பற்றிய கிளைமோர்கள்- கைக்குண்டுகள் துப்பாக்கிகள் என்பன இருக்கின்றன. இதனை நாம் இராணுவத் தளபதிகளுடனான சந்திப்பில் தெளிவாகக் கூறியிருந்தோம்.

உண்மையில் அங்கு இராணுவம் கருணாவினுடைய பெயரைக்கூறி விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துவதற்கும். அதனைப்பலவீனப்படுத்துவதற்கும் மிகவும் கவனமாக இருக்கிறது. அவர்களின் இத்தகைய செயற்பாடு எமது மக்களுக்கு இப்பொழுது நன்கு விளங்கிவிட்டது. இதுவே உண்மையான நிலைப்பாடும்.

**. அண்மையில் இவ்விடயத்தில் கிழக்கில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா?*


மாற்றம் என்று பெரிதாக எதுவும் ஏற்படவில்லை. மட்டக்களப்பில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும், விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுப் பிரதேசம் என்றும் இரண்டு பிரிவுகள் உள்ளன. இந்தப்பகுதிகளில் தாக்குதல் நடத்துபவர்களை நாம் சரியாக இனங்கண்டிருக்கிறோம். இவர்கள் மீது சரியான நடவடிக்கை எடுப்பதில் நாம் இப்போது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

அந்தவகையில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அண்மையில் இராணுவத்தினரால் கொண்டு வரப்பட்ட வெடிபொருட்களையும் ஊடுருவல் அணியையும் நாம் கைது செய்திருக்கிறோம். அவர்களை விசாரணை செய்தபோது அவர்கள் தமக்கான ஆயுதங்களை இராணுவம் தான் தமக்கு வழங்கியதாக தெரிவித்திருக்கிறார்கள்.

அத்துடன் இராணுவத்துக்குரிய அடையாளங்கள் அதில் காணப்படுகிறது. இவற்றை வைத்துப் பார்த்தாலே இப்போது அங்கு நிலவரம் எப்படி இருக்கிறது என்பது புரியும்.

** மட்டக்களப்பு மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் மத்தியில் பதட்டம் நிலவுகிறதா? அல்லது சுமுகமான நிலைக்கு வந்திருக்கின்றார்களா?*

மட்டக்களப்பு மக்கள் ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் இருந்து வந்தார்கள். கருணாவினுடைய செயற்பாட்டுக்காலத்தில் ஒரு நிலையும் அதன் பிற்பாடு நாம் அங்கு சென்றபோது தெளிவற்ற நிலையில் மக்கள் அங்கே இருந்தார்கள். இப்போது இராணுவத்தினரின் செயற்பாட்டில் மக்கள் பீதியடைந்திருக்கின்றார்கள். அதேவேளை எமது விடுதலைப்போராட்டத்திற்கு மிகவும் பக்கபலமாக இருக்கின்றார்கள். இப்போது தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் எமது இயக்கத்தில் புதிய போராளிகளா



கவும் முன்னர் வீடு சென்ற போராளிகள் இப்போது மீண்டும் எம்முடன் இணைந்தும் வருகின்றார்கள். புதிய போராளிகள் ஆயிரக் கணக்கில் எம்முடன் இணைந்திருக்கிறார்கள். புதிய பல பயிற்சி முகாம்களை ஆரம்பித்திருக்கின்றோம்.

இவற்றை வைத்துப்பார்க்கையில் நடந்த பிரச்சினைகள் அனைத்தையும் மக்கள் விளங்கியிருக்கிறார்கள். எமது தேசியப் போராட்டத்திற்குப் பின்னால் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் இருக்கிறார்கள் என்பது உண்மை. போராளிகளும் தளபதிகளும் கருணாவின் விவகாரத்திற்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்துவிடவேண்டும் என்பதற்காக இரவு பகலாய் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

** கருணாவின் விவகாரம் இப்போது எந்தளவில் இருக்கின்றது?*

கருணா எமது மக்களுக்கும், எமது விடுதலைப் போராட்டத்திற்கும் துரோகமிழைத்து துரோகியாகப் பிரிந்து சென்றபோது அவர் தனக்குப் பக்கபலமாகத் தன்னுடன் கூட்டிச்சென்ற போராளிகள் அனைவரும் அவரிலிருந்து விலகிவிட்டார்கள். இப்போது கருணா தனிமரமாகி என்ன செய்வது என்று தெரியாமல் நிற்கின்றார். கருணாவின் முன் இப்போது தனது உயிரை எப்படிக் காப்பாற்றுவது என்ற பலமான கேள்வி உருவாகியிருக்கிறது. அவர் உயிரையும் காப்பாற்ற வேண்டும். அதேவேளை பழி வாங்கல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதையும் நினைக்கின்றார். இதற்காக சிங்கள அரசிற்குத் தன்னை விற்றிருக்கிறார். அவரால் எமது அற்புதமான விடுதலைப் போராட்டத்தை எதுவும் செய்து விட முடியாது. இப்போது கருணா தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

** இப்போதைய நிலை யுத்தத்தை நோக்கிப் போய்க்கொண்டிருப்பதாகவும் அதற்கு கிழக்கின் நிலைதான் காரணமாக அமைவதாகவும் கூறப்படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?*

பொதுவாக இது பரவலாகப் பேசப்படுகிறது. யுத்தத்திற்கான நகர்வு இருப்பதாகக் கூறும்போது சந்திரிகா த்னது ஆட்சியைத் தக்கவைக்க அப்படியான வழிமுறையைக் கையாள்வார் போலவே தெரிகிறது.

அரசியல் ரீதியாகப் பார்க்கும் போது சந்திரிகா அரசைப் பொறுத்தவரையில் அது ஒரு வலுவிழந்த அரசாங்கமாகவே தான் இருக்கிறது. எனவே தான் பாராளுமன்றத்தைக் எப்படிப்பலமாக்குவது? தனது ஆட்சியை எப்படித்தக்கவைப்பது, தான் பிரதமராவதற்கு பாராளுமன்றத்தை வைத்து அரசியல் யாப்பை எப்படி மாற்றம் செய்யலாம். அதற்கான ஆதரவை எப்படிப்பெறலாம். அதற்காகச் சண்டையைத் தொடங்கலாமா? இராணுவத்தை எப்படிப் பயன்டுத்துவது என்ற முடிவு எடுக்கமுடியாத ஒருவித பதட்டநிலையில் அரசாங்கம் தற்போது இருக்கிறது.

சண்டை ஆரம்பிப்பது எமது கையில் இல்லை. சண்டையைத் தொடர்வதா? இல்லையா? என்பதை முடிவு செய்வது சந்திரிகா தான். எங்கள் தலைவர் சமாதானம் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். எமது தலைமை சண்டையை விரும்பவில்லை. மாறாக சமாதானத்தைத் தான் விரும்புகிறது.

**இன்றைய சூழலில் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் நீங்கள் என்ன செய்தியைச் சொல்ல விரும்புகிறீர்கள்?*

எமது விடுதலைப் போராட்டம் இன்று எமது தேசியத் தலைவரின் வழிகாட்டலில் மிகவும் நேர்த்தியாக முன்னெடுத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருக்கிறது. இதற்காக நாம் பல அர்ப்பணிப்புக்களையும், விலை மதிக்க முடியாத தியாகங்களையும் செய்திருக்கின்றோம். எமது மக்களின் விடுதலைக்காக நடைபெற்று வரும் இந்தப் போராட்டம் பல

**- நேர்காணல்: அ.லோகீசன், சசிக்குமார்.**

துரோகத்தனங்களையும் தடைகளையும் தாண்டி இன்று சர்வதேச ரீதியான அரசியல் மாற்றத்தை அடைந்து வந்திருக்கிறது.

இதற்குக் கொடுக்கப்பட்ட விலை எமது மக்களினுடையது. எமது மக்களுக்கான உரிமையை இனவாதசக்திகளிடம் இருந்தும் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்தும் எமது தேசியத் தலைவர் பெற்றுத்தருவார். எனவே எமது மக்கள் அனைவரும் எமக்கான இறுதி வெற்றி வரும்வரை தேசியத்தலைவரின் கையைப் பலப்படுத்தி அவருடன் ஒன்றித்து எமக்கான விடுதலையைப் பெற உழைக்க வேண்டும். இதுவே நான் மக்களுக்குச் சொல்கின்ற செய்தி.

---

# மனைவியை கொலை செய்து குளத்தில் வீசிய சிப்பாய்

மனைவியின் கழுத்தை நெறித்து கொலை செய்து பொலநறுவ பராக்கிரம சமுத்திரத்தில் வீசிய இராணுவச்சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். பொலநறுவ புண்ணிய பூமியில் இக்கொலை இம்மாதம் 14ஆம் திகதி 9.30 மணி அளவில் நடந்துள்ளது. பின் சடலம் 15ஆம் திகதி காலை பராக்கிரம சமுத்திரத்தில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

# வைத்தியசாலையிலிருந்து குழந்தையை கடத்திய பெண் வைத்தியர்

வைத்தியசாலையில் இருந்து குழந்தையொன்றைக் கடத்தியதாக பெண் வைத்தியர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இப்பெண் வைத்தியர் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் நெருங்கிய தொடர்புடையவர் என்றும் செய்திகள் கூறுகின்றன.தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இது குறித்து முறைப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், கந்தளாய் வைத்தியசாலையின் பிரசவ விடுதியில் இருந்து குறித்த பெண் வைத்தியரால் கடத்தப்பட்ட குழந்தை எங்கே, யாருடன் இருக்கிறது என்பது குறித்து இதுவரை தெளிவாகத் தெரியவரவில்லையென்றும் மேற்படி அதிகாரசபைத் தலைவர் கூறியுள்ளார்.

---

# சோமவன்ச அமரசிங்க நாட்டைக் குழப்பாமல் பிரிட்டன் சென்று தன்பாட்டைப் பார்க்க வேண்டும்

## தமிழரசுக் கட்சிப் பா.உ.. ரவிராஜ் தெரிவிப்பு

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க பிரித்தானியாவிற்குச் சென்று தன்னுடைய பாட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டும். நாட்டையும் சமாதானத்தையும் குழப்பகூடாது என தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்; தமிழ்த் தேசிய பாராளுமன்ற உறுப்பினர்களை தமிழ் மக்களுடைய சனநாயக உரிமைகளைக் கூட கொச்சைப் படுத்துகின்ற விதத்தில் தமிழரசுப் பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்திலிருந்து விரட்ட வேண்டுமெனக் கூறியுள்ளார். இந்நாட்டைவிட்டு ஓடிய அவர்கள் இன்று சனநாயகம் பற்றிப்பேசுவது புதுமையாக இருக்கிறது எனத் தெரிவித்தார்.

அத்துடன் சமாதானப் பேச்சு வார்த்தைகள் மீண்டும் தொடங்கப்பட வேண்டுமானால் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகள் சம்பந்தமாக முதலில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தமிழ் மக்களுடைய இயல்பு வாழ்க்கை தொடர்பாக ஓர் முடிவு எடுக்கப்பட்டு இடைக்கால நிர்வாகம் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கொடுக்கப்பட்டால் தான் ஏனைய விடயங்களில் நாங்கள் ஓர் இணக்கப்பாட்டிற்கு வரமுடியும் என்ற ஓர் நிலைப்பாட்டில் தான் தமிழ்த் தேசியம் இன்று இருக்கின்றது என்கிறார்.

இதேவேளை சோமவன்ச அமரசிங்க இந்நாட்டில் ஓர் முக்கியமான காலகட்டத்தில் தங்களின் தலைவர்களை காட்டிக்கொடுத்து விட்டு நாட்டைவிட்டு வெளியூரிற்கு ஓடியவர் அவர் அண்மையில் மிகவும் பாரதூரமான கருத்துக்களைக் கூறிவருகின்றார். அவர் நாட்டை விட்டுவிரட்டப்பட வேண்டுமென மேலும் தெரிவித்தார்.

# மாகாணசபைத் தேர்தலில் மக்களின் தீர்ப்பு ?

உப்புள் ஜோசப் பர்ணாந்து
(லங்காதீப)
தமிழில்.வடிவேல்

கடந்த 10 ஆம் திகதி சிறிலங்காவில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலுக்கு முன்பு" என்ன நடக்கும்?" "ஐ.ம.சு. கூட்டணி வெல்லும்" என்று மக்கள் எதிர்வு கூறினர் ஆயினும் தேர்தல் முடிந்ததும் மக்களுக்கு தேர்தல் வேண்டாம் என்றாகி விட்டது" என்று தென்னிலங்கை மக்கள் சலிப்புறுகின்றனர்.

இது சிறிலங்கா அரசியலைப் பொறுத்தளவில் புதுமையானதல்ல. இப்படியான வாசகங்கள் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற வடமேல் மாகாணசபைத் தேர்தலோடு ஆரம்பித்த ஒன்றாகும்.

இரு பெரும் கட்சிகளும் ஒரே மாதிரியான போக்கையே கடைப்பிடிப்பதாக அன்றே கருதப்பட்டது. அதன் விளைவாக ஜே.வி.பியின் பக்கம் மக்களின் கவனம் திரும்பியது. இந்த ஜே.வி.பி இருபெரும் கட்சிகளான ஐ.தே.மு, ஐ.ம.சு முன்னணிகளை குறைகூறிக்கொண்டு தன்வழி தனிவழி என்ற நிலையைத் தோற்றுவித்து அதன் பயனையும் பெற்றுக்கொண்டது.


ஆனால் இன்று ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து தன்னையும் ஒரு பலமான கட்சியாக உருவாக்கி விட்டது. எனினும் நடந்து முடிந்துள்ள மாகாணசபைத் தேர்தலோடு ஐ.தே.மு., ஐ.ம.சு.மு, ஜே.வி.பி. இக்கட்சிகள் அனைத்தும் ஒரே மாதிரியானவை என்ற மக்களின் கருத்து வெளியாகியிருக்கிறது. "நாடுமுன்னேறு கிறது" "மக்கள் பின்தள்ளப்படுகிறார்கள்" என்பதும் பொருத்தப்பாடன்று நாடு முன்னேற்றம் என்றால் மக்களும் (ஆதரவளித்த வாக்காளர்கள்) முன்னேற்றமடைதல் வேண்டும்.முன்னரே வாக்காளர்கள் மாகாண சபையை நிராகரித்திருந்தால், 1993 ஆம் ஆண்டு அல்லது 1999 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்களை மக்கள் நிராகரித்திருக்க வேண்டும். 1999 ஆம் ஆண்டு மாகாணசபைத் தேர்தலில் வாக்களித்தோர் 67.6 வீதம். ஆனால் ஜுலை 10 .2004 இல் நடந்தது யாது?

2004 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் கூட மக்கள் பெரிதாக வாக்களிப்பீல் பங்கேற்கவில்லை. அவர்கள் இருபெரும் கட்சிகளையும் நிராகரித்து விட்டுள்ளனர். வடக்கு கிழக்கைத் தவிர்த்தாலும் ஐ.தே.கவுக்கு 2004 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கிடைத்த வாக்குகள் 8 இலட்சத்து 73 ஆயிரத்து 824 ஆகும். ஆனால் ஐ.ம.சு. முன்னனிக்கு அப்போது கிடைத்த வாக்குகளை விட மாகாணசபைத் தேர்தலில் 5 இலட்சத்து 19 ஆயிரத்து 493 வாக்குகள் குறைவாகவே கிடைத்துள்ளது.

பொதுவாக புதிய அரசு ஒன்று பதவியேற்ற பின் நடைபெறும் ஒரு இடைத் தேர்தலில் அல்லது எந்தத் தேர்தலிலும் குறிப்பாக மாகாணசபைத்தேர்தலில் என்று வைத்துக் கொண்டால் எதிர்க்கட்சிக்கு எந்த ஒரு வாக்குகளும் கிடைக்காமல் கட்சி இருந்த இடம் இல்லாமல் போய்விடுவது சாதாரணவிடயம். 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலின் பின்னர் 2002 ஆம் ஆண்டு மார்ச்சில் நடைபெற்ற குட்டித் தேர்தலில் அப்போதைய எதிர்க்கட்சியான பொ.ஐ.மு. இருந்த இடம் தெரியாமல் போனது. அது தனது கோட்டையான அத்தன கல தேர்தல் தொகுதியைக் கூட தக்கவைத்துக்கொள்ள முடியவில்லை. 1997 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் 200 இடங்களைப் பெற்ற பொ.ஐ. முன்னணி 2002 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் ஒரு இடம் மட்டுமே கிடைத்தது. 2001 ஆம் ஆண்டு வெற்றிபெற்ற மொனராகல தொகுதியில் கூட ,2002 உள்ளூராட்சித் தேர்தலில் தோல்வியடைந்தது. 2001 ஆம் ஆண்டு 33 இலட்சத்து 30 ஆயிரத்து 815 வாக்குகளைப் பெற்ற பொ.ஐ. முன்னணி 2002 இல் அது 22 இலட்சத்து 68 ஆயிரத்து 219 ஆக குறைந்தது அந்த வகையில் எதிர்க்கட்சி ஆசனத்துக்கு வந்த 3 மாதங்களில் சுமார் 10 இலட்சம் வாக்குகளை அது இழந்தது. ஆகவே ஐ.தே.க.வுக்கும் பொ.ஐ. முன்னணிக்கும் இடையிலான வித்தியாசம் சுமார் 7 இலட்சம் முதல் 18 இலட்சமாக விருந்தது. அப்போது எதிர்க்கட்சி ஸ்தானத்திலிருந்த ஜே.வி.பிக்கு சுமார் 3 இலட்சம் வாக்குகள் கிடைக்காமல் போனது.

எனினும் இக்காரணங்களினால் ஐ.தே.க. தற்போது அடைந்திருக்கும் தோல்வியை எளிதாகக் கருத முடியாது.

தற்போதைய நிலையில் ஐ.தே.கட்சி அதள பாதாளத்தில் விழுந்து கிடக்கிறது. இதிலிருந்து மீள முடியாது விட்டால் அது முச்சக்கரவண்டிச் சின்னத்தைக் கொண்ட கட்சியின் நிலையை அடைந்து விடும். அக்கட்சியில் தலைவரும், செயலாளரும் மட்டுமே எஞ்சியுள்ளனர். தற்போதைய துருப்பிடித்த ஐ.தே.கட்சி என்ற இயந்திரத்தை பஞ்சிகாவத்தையில் தள்ளி விட்டுக் கட்சித் தலைவர்களினதும், உறுப்பினர்களதும் நன்மைக்கல்லாமல் கட்சியின் நன்மைக்காகச் செயற்படும் ஜே.வி.பி போன்ற இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்யாவிட்டால் இன்னும் சந்திக்கவிருக்கும் தேர்தலில் படுதோல்வியடைந்து தலைவரும், செயலாளரும் மட்டும் செயலாற்றும் கட்சியாகப் போய்விடும். ஜே.வி.பி இயந்திரம் தலைமைத்துவத்தையும், உறுப்பினர்களையும் நடத்துவதற்கான ஒரு கட்சி அல்லாமல் கட்சியை நடத்தும் இயந்திரமாக இருக்கிறது. அந்த நிலைக்கு ஐ.தே.கட்சி மாறவேண்டும்.




சந்திரிகாவின் கூட்டணி மாகாண சபைத் தேர்தலில் பெரும் வெற்றிவாகை சூடி இருப்பது உண்மையே. ஆனால் பதவிக்கு வந்த கட்சி ஒன்று மூன்று மாதங்களுக்குள் அது சுமார்6 இலட்சம் வாக்காளர்களின் ஆதரவை இழந்திருப்பது சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இதுவே முதல் தடவை.



பொதுவாக முன்கூறியபடி கட்சி ஒன்று ஆட்சி வந்தபிறகு நடைபெறும் இடைத் தேர்தல்களில் அல்லது மாகாண சபைத் தேர்தல்களில் ஆளும் கட்சிப்பொதுத் தேர்தலில் வாக்குகளை விட அதிக வாக்குகள் பெறவேண்டும்.

அதிக தூரம் செல்லத் தேவையில்லை. 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற குட்டித் தேர்தலில் (உள்ளூராட்சி) ஐ.தே.க பெற்ற வாக்குகள் அது பொதுத் தேர்தல்களில் பெற்ற வாக்குகளிலும் 55 ஆயிரத்து 170 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றது. இது வடக்கு கிழக்கையும், வடமேல் மாகாணத்தையும் தவிர்த்துப் பெற்ற வாக்குகளாகும். அது சந்திரிகா கூட்டணிக்கு சாத்தியப்படாமல் விட்டது ஏன்? பெரும் வெற்றியைப் பெற்றுவிட்டதாகக் கூறிக் கொள்ளும் கூட்டணி அதைச் சிந்திக்க வேண்டும்.

"இந்த மாகாணசபைத் தேர்தலை இரண்டாவது பொதுத்தேர்தல் என்று கருதி வாக்களியுங்கள்" இது அக் கூட்டணியின் பிரச்சாரங்களில் ஒன்றாக இருந்தது. ஆனால் பொதுத்தேர்தல்களில் வாக்களித்தவர்களில் சுமார் 6 இலட்சம் பேர் மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. சுமார் 28 இலட்சம் பேர் வாக்களித்துள்ளனர். இந்த 28 இலட்சத்தில் ஜே.வி.பிக்கு வாக்களித்தோர் தொகை யாது? அதைப்பற்றியும் சிந்திப்பது நல்லது. அதற்குக் கணிசமான வாக்குகள் கிடைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடியும். போட்டியிட்ட தொகுதிகளில் ஒன்றிரண்டைத் தவிர அனைத்திலும் வென்றுவிட்டது. அவ்வாறாயின் சிறில. சுதந்திரக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் என்ன? 1977 இல் படுதோல்வியைச் சந்தித்த சிறில.சு.கட்சி பெற்ற வாக்குகளின் வீதம் 29 ஆகும். 1977 முதல் இன்று வரை கட்சிபெற்ற வாக்குகளின் வித்தியாசத்தைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அதன் பொறுப்பாக இருந்தது. இப்போது ஜே.வி.பி இணைந்திருப்பதால் அதற்குக் கிடைக்கும் வாக்குகள் குறைவடைந்து செல்வதால் அதனையும் பாதுகாக்கவேண்டியிருக்கிறது. தவறினால் முச்சக்கரவண்டிக் கட்சியின் நிலையே அதுவும் அடைந்துவிடும். தென்பகுதியில் அக்கட்சிக்குக் கிடைத்த வாக்குகள் ஜே.வி.பியை விடக்குறைவாகும். இது அனைவருக்கும் தெரிந்த விடயம். அம்பாந்தோட்டை மாவட்டத்தில் அதற்கு சுமார் 37 ஆயிரம் வாக்குகள் குறைந்து விட்டன. அதேபோல் மாத்தறை மாவட்டத்திலும், காலி மாவட்டத்திலும் முறையே சுமார் 59 ஆயிரம், 68 ஆயிரம் வாக்குகள் குறைந்துவிட்டன. என்றாலும் பொதுத்தேர்தலில் ஜே.வி.பி பெற்ற வாக்குகளை விடக்குறைவாகும். ஆக அக்கட்சி உறுப்பினர்கள் வெற்றி பெற்றிருப்பது சிறிலங்காசுதந்திரக் கட்சி வாக்குகளைத் திருடியுள்ளதாலா என்பது கேள்வியாகிறது.

எவ்வாறாயினும் இந்தத் தேர்தல் முடிவுகள் சிறில சு.கட்சியை விழித்துக் கொள்ள வைத்துள்ளது. மூன்று மாதங்களில் 6 இலட்சம் வாக்குகள் குறைந்துள்ளதால் அதன எதிர்காலம் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

அக்கட்சி தற்போது பற்பல வாக்குறுதிகளை அளித்திருக்கிறது. பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல், உரமானியம், பஸ்கட்டணம், எரிபொருள் விலை, மின்கட்டணம் என்பவற்றின் உயர்வைத் தவிர்த்துக்கொண்டுள்ளது. எனினும் குறைவான வாக்குகளையே மாகாணசபைத் தேர்தலில் பெற்றுக்கொண்டது.

இந்த நெருக்கடி நீண்டு சென்றால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தனது கோட்டையான அத்தனகலவையும் ஜே.வி.பி.யிடம் தாரைவார்க்க வேண்டி ஏற்பட்டுவிடும். எனினும் அக்கட்சியின் காவல் தெய்வங்களான விமல்வீரவன்ச, மங்கல சமரவீர கூட்டு இருக்கும் வரை ஐ.தே.கட்சிக்கு அதனை அசைக்க முடியாது. ooo

## ரணில் விக்கிரம சிங்க– சந்திரிகா அடுத்த வாரம் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க எதிர்வரும் வாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்திக்கவுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பது குறித்து அரசியல் கட்சிகளின் தலைவர்களை சனாதிபதி சந்தித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளார். இதன் ஒரு கட்டமாகவே ரணில் விக்கிரம சிங்கவுடனான சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.இதேவேளை அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் சனாதிபதியின் சந்திப்புக்கான கடிதங்கள் இந்த வாரத்துக்குள் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகச் சனாதிபதி செயலகத் தரப்புகள் கூறுகின்றன.

சனாதிபதி கடந்த மாதம் லண்டன் சென்று திரும்பிய பின்னரே எதிர்க்கட்சித் தலைவரைச் சந்திக்கும் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது (32)

## மட்டு. நிலவரம் தொடர்பாக சனாதிபதிக்கு ஜயந்த தனபால விளக்கம் அளிப்பார்

சமாதான செயலக செயலாளர் ஜயந்த தனபால தமது மட்டக்களப்பு விஜயம் தொடர்பாக இன்று சனாதிபதியைச் சந்தித்து விளக்கம் அளிக்கவுள்ளார்.

கடந்த வெள்ளியன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர், அங்கு போர்நிறுத்த உடன்பாட்டை உறுதி செய்வதற்கான ஏதுநிலைகள் குறித்து பல தரப்புடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இதன் பின்னர் கருத்துரைத்த அவர், மட்டக்களப்பில் இடம்பெறுகின்ற வன்முறைச் சம்பவங்களுக்கு இனந்தெரியாத குழு ஒன்று செயற்படுவதாக மக்கள் கருத்தை வெளிப்படுத்தினார். இது தொடர்பில் சனாதிபதி விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த நிலையில் தமது மட்டக்களப்பு விஜயம் குறித்து சனாதிபதிக்கு விளக்கமளிக்கும் அவர், எதிர்வரும் வாரம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கடந்த வாரத்தில்....

## 08.07.2004-14.07.2004

### 08.

மத்திய அரசு சேது சமுத்திரத் திட்டத்திற்கு நிதிதிரட்டும் அமைப்பை ஆரம்பித்தது.

★. காஸாவின் வடக்கே இடம் பெற்ற கடும் சமரில் 7 பலஸ்தீனர்கள் கொல்லப் பட்டனர்.



இறுதிச் சடங்கு நிகழ்வு

★.ஆஸ்திரியாவின் புதிய சனாதிபதியாக ஹெய்ன்ஸ் பிவுர் சத்தியப்பிரமாணம் செய்தார்.

★. ஆப்கானிஸ்தானில் ரங்கன்ஹார் மாகாணத்தில் கோகிமாணி மாவட்டத்தில் வாக்களித்துவிட்டு காரில் திரும்பிக் கொண் டிருந்த போது கண்ணிவெடி வெடித்ததில் ஒருவர் பலி ஒருவர் படுகாயம்.

★ சுமராவில் உள்ள தேசிய காவலர் களின் தலைமையகம் மீது மேற்கொண்ட தாக்குதலில் 5 அமெரிக்க வீரர்களும், இரு ஈராக்கியர்கள் படுகாயம்.

★ லண்டனில் ஸ்கொட்லண்ட் யாட் பொலிசார் நடத்திய பாரிய சுற்றி வளைப்பில் 13 ஈழத்தமிழ் இளைஞர் கைது.


★ பாக்தாத்தில் இடம் பெற்ற மோட்டார் தாக்குதலில் நான்கு அமெரிக்கப் படையினர் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர்.

★ காஸாப் பள்ளத்தாக்கின் வடக்குப் பகுதியில் இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தீனப் போராளிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடும் மோதலில் 6 பலஸ்தீனர் பலி.

★.சீனச் சரக்குக் கப்பலும், தென்கொரிய சரக்குக் கப்பலும் நேருக்கு நேர் மோதியதில் சீனக்கப்பலில் பயணம் செய்த 18 பேர் படுகாயம்.

### 09.

★ இந்தியாவின் புதிய அரசாங்கத்துடன் பேச்சு நடத்துவதற்கென மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு இந்தியாவுக்கு வருகைதந்திருந்த சிங்கப்பூர் பிரதமர் கோ.ரேசாக்டொங் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்தார்.



சந்திப்பின் நிகழ்வில்

★ ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் வைத்து நிதி தொடர்பாக வெளிவரும் போபஸ் சஞ்சிகையின் ஆசிரியர் போஸ் கிளிப் நிகோப் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### 10.

★ பாக்தாத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கருகில் இடம் பெற்ற மோட்டார் தக்குதலில் சிறுவர் உயிரிழப்பு.

★ இந்திய மத்தியப் பிரதேச மாநிலம் பிகுல் மாவட்டத்தில் இருந்து 30 கி.மீ. தூரத்தில் உள்ள அமலாநகருக்கு அருகே உள்ள விமானப்படை ஆயுதக்கிடங்கில் எதிர்பாராது ஏற்பட்ட வெடி விபத்தில் ஆயுதங்கள் எரிந்து அழிந்தன.

### 11.

★ இஸ்ரேலின் டெல்அவிஸ் நகரில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் ஒருவர் பலி 21 பேர் படுகாயம்.



தாக்குதலின் பின் ஆராய்வு

★ மத்திய காஸாவில் அம்பராவ நகருக்கு அண்மையில் திருமண வீடொன்றுக்குள் பாரஊர்தியொன்று பின்புறமாக வந்து மோதியதில் 17 பேர் பலி; 13 பேர் காயம்.

★ மேற்கு ஆப்கான் நகரான ஹோட்டில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் பலி 54 பேர் காயம்.



சம்பவ இடத்தில் பாதுகாப்பு

### 13.

★ இந்தியாவுடனான உறவுகளை மேம் படுத்தும் முகமாக அமெரிக்க வெளியுற வுத்துறை துணை அமைச்சர் றிச்சட்ஆர்மிரேச் இந்தியா விஜயம்.

### 14.

★ ஈராக்கில் வடக்கில் மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் மோகல் நகர மேஜரும் அவரது இரு மெய்ப்பாதுகாவலர்களும் கொல்லப்பட்டனர்.

★ வடசீன மாகாணமான செவ்ஸியிலுள்ள ஹீயூலோங் கிராமத்தில் சக்தி வாய்ந்த குண்டொன்று வெடித்ததில் 16 பேர் கொல்லப்பட்டனர் 12 வீடுகள் தரைமட்டம்.

★ ஈராக் தலைநகரம் பாக்தாத்தில் இடம் பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 10 பேர் உயிரிழப்பு 40 பேர் காயம்.



தாக்குதலினால் எழும் புகைமண்டலம்

★ ஈராக்கிய தீவிரவாதிகள் பல் கேரிய பணயக் கைதிகளில் ஒருவரை கொலை செய்தனர்.

★ ஈராக்கில் பணிபுரியும் பிலிப்பைன்ஸ் இராணுவத்தினர் படிப்படியாக வாபஸ் பெறப்படும் நடவடிக்கை ஆரம்பம்.

★ ஜம்முகாஷ்மீரில் 1381 அமர்நாத் யாத்திரிகர்களின் யாத்திரையை ஜம்முகாஷ் மீர் துணை முதலமைச்சர் வெங்கட்ராம் சர்மா தொடக்கி வைத்தார்.

★

# இ.நி.வழங்க முன் மக்கள் கருத்தை அறிக; ஜே.வி.பி.யின் கோரிக்கை சனாதிபதியால் ஏற்பு

## சிங்கள வாரஇதழ் தகவல்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் வழங்கு வது தொடர்பான பேச்சுக்கள் நடத்துவதாயின் அது பற்றி பொதுமக்களின் கருத்தை அறிய வேண்டும் என்ற ஜே.வி.பி.யின் கோரிக்கைக்கு சனாதிபதி சந்திரிகா இணக்கம் தெரிவித்துள்ளார் என லக்பிம சிங்களவாரஇதழ் தெரி வித்துள்ளது.

ஐ.மக்கள் சு.முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் கடந்த 13ஆம் திகதி சனாதிபதி மாளிகையில் சந்தித்த போது இக் கோரிக்கையை ஜே.வி.பி.யின் செயலர் வீரவன்ச முன்வைத்தார். அப்போது புலி களுக்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்பட்டால் அது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் என விமல்வீரவன்ச சுட்டிக்காட்டி யிருந்தார் என்பதையும் அப் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

# ஹெல உறுமயவிலிருந்து திலக் கருணாரட்ண ஆதரவாளர்கள் சகிதம் வெளியேற்றம்

## - கட்சி அலுவலகத்தை அகற்றவும் நிர்ப்பந்தம்

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவுடன் அதிருப்தியடைந்த நிலையில் அதன் பொதுச் செயலாளர் திலக் கருணாரட்ண கட்சியிலிருந்து விலகிச் சென்றதையடுத்து, மேலும் பல ஆதரவாளர்களும் அக்கட்சி யிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

அத்துடன், இதுவரை காலமும் கட்சிக் காரியாலயமாகப் பயன் படுத்தப்பட்டு வந்த தனது வீட்டி லிருந்து ஜாதிக ஹெல உறும யவினர் விலகிச் செல்ல வேண்டும் எனவும் திலக் கருணாரட்ண கோரிக்கை விடுத்துள்ளார். கட்சியில் உள்ள சாதாரண மக்களை பாராளு மன்றத்துக்கு செல்லும் வகையில் பிக்கு பாராளுமன்ற உறுப் பினர்கள் தமது பாராளு மன்றப் பதிவுகளை இராஜினாமாச் செய்ய வேண்டுமெனத் திலக் கருணாரட்ணா வால் விடுக்கப்பட்ட வேண்டு கோள், ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைப் பீடத்தால் நிராகரிக் கப்பட்டமை காரணமாகவே கட்சியின் சகல பொறுப்புக்களிலி ருந்தும் விலகிச் செல்வதென திலக் கருணாரட்ண தீர்மானித்ததாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, கட்சியில் அங்கம் வகிக்கும் சாதாரண மக்களை பாராளுமன்றத் துக்கு அனுமதிக் கும் வகையில் பாராளுமன்றப் பதவியிலிருந்து பிக்குகள் ஒரு போதும் இராஜினாமாச் செய்மாட் டார்கள் என ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் உடுவே தம்மலோகத்தேரர் தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநிதித் துவப் படுத்துபவர்களாக பிக்குகள் இருக்கின்றவரை மட்டுமே கட்சியினால் அரசியலில் நீண்ட தூரம் பயணிக்க முடியுமெனவும், கட்சியில் அங்கம் வகிக்கும் சாதாரண மக்கள் கட்சியின் வளர்சிக்கான ஆலோசகர்களாக மட்டுமே இருக்க முடியுமெனவும் உடுவே தம்மாலோகத் தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முல்லை. மக்கள் வங்கிக் கிளையில் அடகு நகைகளை பெற்றுக்கொள்க

(முல்லை)

1990 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு முன்பு முல்லைத்தீவு மக்கள் வங்கியில் நகைகளை அடகு வைத்தவர்களில் இது வரை காலமும் எடுக்காதவர்கள், கடந்த 10,05.2004 இற்கு முன்பு பணம் செலுத்தியோர் தங்கள் நகைகளை முல்லைத்தீவு மக்கள் வங்கிக் கிளையில் பெற்றுக் கொள்ள முடியும் என மக்கள் வங்கி முகாமை யாளர் தெரிவித்தார்.

பணம் செலுத்திய பற்றுச் சீட்டு, அடையாள அட்டை என்ப வற்றுடன் வருகை தருமாறு முகாமையாளர் கேட்டுள்ளார். (20)

# இலையான்களின் தொல்லை அதிகரிப்பு

(முள்ளியவளை)

முள்ளியவளைப் பிரதேசத்தில் பொது இடங்களில் இலையான் களின் தொகை அதிகரித்து சுகாதாரச் சீர்கேடாகவுள்ளது.

தண்ணீரூற்று பொதுச்சந்தை, முள்ளியவளை பொதுச்சந்தை, மதுபான விற்பனை நிலையங்கள் தேநீர்ச்சாலைகளில் இலையான் களின் தொகை அதிகரித்து நுகரும் பொருட்களில் மொய்த்து சுகாதார சீர்கேடாகவுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

சந்தைகளில் மீன் வியாபா ரப் பகுதிகளில் மீன்களை மொய்த்து மீன்களை இனங்காண முடியாத வாறு இலையான்கள் காணப் படுகின்றன.

அதேவேளை இதனால் பல தரப்பட்ட தொற்றுநோய்கள் பரவக் கூடிய நிலையில் சுகாதார சீர் கேடாகவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஆ)

# வருடாந்தத் திருவிழா

(மன்னார்)

மன்னார் வங்காலை புனித அன்னம்மாள் ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியள வில் வங்காலை பங்குத் தந்தை கே.அருளப்பர் தலைமையில் இடம்பெற்றது. எதிர்வரும் 2ஆம் திகதி ஆயர் தலைமையில் திருநாள் திருப்பலி காலை 7.30 மணியளவில் நடைபெறும் தொடர்ந்து வழிபாடுகள் இடம் பெறுகின்றன. (மி)

# வீடமைப்பு

(மன்னார்)

போரினால் பாதிக்கப்பட்ட பரப்புக்கடந்தான் கிழக்கு, மேற்கு ஆகிய கிராமங்களில் உள்ளவர் களுக்கு நோர்வே அகதிகள் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மன்னார். "சோஆ" நிறுவனம் 25வீடுகளை கட்ட ஆரம்பித் துள்ளது.

ஒவ்வொரு வீடும் தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம்ரூபா பெறுமதிவாய்ந்ததாகக் கூறப் படுகின்றது.

பயனாளிகளை மாந்தை மேற்கு உதவி அரசாங்க அதிபர் தெரிவு செய்து வழங்கியுள்ளார். (மி)

# 25 கட்சிகளின் பதிவுகளை இரத்துச்செய்யத் தீர்மானம்

(கொழும்பு)

தொடர்ந்து மூன்று தேர்தல்களுக்கும் அதிகமாகப் போட்டியிடாத 25 கட்சிகளின் பதிவுகளை இரத்துச்செய்யத் தேர்தல் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாக அறிய வருகிறது.

இக்கட்சிகளுள் சிறிலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி, சிறிலங்கா மகாஜனக்கட்சி ஆகியனவும் அடங்கும்.

தற்போது பதிவு செய்யப்பட்டுள்ள 53 சிறிய கட்சிகளில் அநேகமான கட்சிகள் பெரும் பான்மைக் கட்சிகளுடன் இணைந்திருப்பதாலும், சில கட்சிகள் வருடக் கணக்கில் செயலற்றுப் போயிப்பதாலும் அதனால் வாக்களிப்பின் போது மக்கள் அசௌகரியங்களுக்குள்ளாவதாலும் தேர்தலின் போது தேவையற்ற மேலதிக செலவுகள் ஏற்படுவதாலும் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக ஆணையாளர் தயானந்த திசாநாயக்க அறிவித்துள்ளார் எனினும் அதற்கான அங்கீகாரம் வழங்காதிருப்பதாக ஆணையாளர் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

## எதிர்க்கட்சியினர் விரும்பியவாறு சட்ட மூலங்களைக் கொண்டுவர முடியாது

### புத்திஜீவிகள் சங்கத்தின் தலைவர்

(கொழும்பு)

எதிர்க்கட்சியினர்தாம் விரும்பியவாறு சட்டமூலங்களுக்கான பிரேரணைகளை பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்க முடியாது. சட்ட மூலங்களை பாராளுமன்றத்திற் குள் கொண்டு வருவது அரசின் பணியென புத்திஜீவிகள் சங்கத்தின் தலைவர் பராக்கிரம கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

அரச ஊடகத்துறைகளுக்குப் புதிய பொறுப்பாதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம் அரசியல் யாப்புச் சபைக்கு வழங்கப்பட வேண்டுமென அண்மையில் எதிர்க்கட்சியினர் தெரிவித்தமைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே புத்திஜீவிகள் சங்கத் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

இதுவரை நாட்டில் இருந்த அரசியல் யாப்புச் சபைகள் ஊடகத் துறையினர் சுதந்திரமான செயற்பாட்டை உறுதி செய்யவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எதிர்க்கட்சி, கூட்டு அமைப்பிலிருந்து விலகப் போவதில்லை என எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முழு ஆதரவும் எதிர்கட்சிக்கு உள்ளதாகவும், தொடர்ந்து எதிர்க்கட்சி வரிசையில் இருந்து செயற்படப் போவதாக இ.தொ.கா. தன்னிடம் உறுதி அளித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

**– பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு –**

## குறைந்த தரங்களில் பணியாற்றும் பட்டதாரிகள் மனக்கிலேசம்

தற்போது பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தினால் எமக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பது குறித்து அறிவிக்க வேண்டுமென அரசாங்க சேவையில் குறைந்த தரங்களில் பணியாற்றுகின்ற பட்டதாரிகளின் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. எமக்கு அநீதி இழைக்கப்படுமாயின் சுமார் 2500 உறுப்பினர்களைக் கொண்ட எமது சங்கம் அதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமென வலியுறுத்தியுள்ளது.

## சிறையிலுள்ள கருணா தரப்பினரை பாதுகாக்க ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள கருணா தரப்புக் கைதிகளை பாதுகாப்பான வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறு ஜே.வி.பி. சனாதிபதி சந்திரிகாவை கடிதம் மூலம் கோரியுள்ளது.

இது குறித்து ஜே.வி.பி.யின் பிரச்சாரச் செயலாளர் விமல்வீரவன்ச கூறுகையில் "அண்மையில் மட்டக்களப்புச் சிறையில் கருணா தரப்பினர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து ஏனையோரின் உயிருக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார்.

இது விடயத்தில் சனாதிபதி விசேட கவனம் செலுத்தவேண்டும் எனக்கோரும் குறித்த கடிதத்தின் பிரதிகள் அனைத்து அரசியல் குழுக்களுக்கும், ஊடகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.


## இயல விற்பனை

உந்துருளிகள் இயங்கும் நிலை / உதிரிகளாக்கும் நிலை, ஈருருளிகள் இயங்கும் நிலை, பார்வையிடும் காலம் 17.07.2004, 18.07.2004, 19.07.2004.

* இயலம் நடைபெறும் நாள் 20.07.2004
காலை 10.00 மணி

* இடம்:- உடைமைப் பகுதிச் செயலகம் வேணாவில் புதுக்குடியிருப்பு.

உந்துருளிக்கான கேள்வி கோரல் விண்ணப்பக் கட்டணம் 200ரூபா

(சி-9146)



## முக்கிய அறிவித்தல்

### மணல் அகழ்வு துணுக்காய் பிரதேச சபைப்பிரிவு

பின்வரும் இடங்களில் மாத்திரம் மணல் அகழ்வு செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

01. புத்துவெட்டுவான்

02. ஐயன்கன்குளம்

03. கல்விளான்

04. தென்னியன்குளம்

இவ்விடங்களில் மணல் ஏற்றுவதற்கு முன், துணுக்காய்ப் பிரதேச சபையில் கீழ்க் குறிப்பிட்டவாறு உரிய கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றக்கொள்ளல் வேண்டும்.

உள்ளூர்த் தேவைக்கு உழவு இயந்திரம் ஒரு லோட் -50/=
பிரதேசசபை எல்லைக்கு வெளியே கொண்டுசெல்ல உழவு இயந்திரம் ஒருலோட் -100=
பிரதேசசபை எல்லைக்கு வெளியே கொண்டுசெல்ல பாரஊர்தி ஒருலோட் -300/=

இப்பற்றுச்சீட்டினைப் பரிசோதனை செய்வதற்கான அதிகாரம் காவல்துறை உறுப்பினர்கள், கிராமஅலுவலகர்கள், பிரதேசசபை அலுவலர்கள், நிர்வாகசேவை அலுவலர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிபெறாது மணல்ஏற்ற முயற்சித்தல், வீதியில் கொண்டுசெல்லல் ஆகியவற்றிற்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேற்குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களில் மணல் அகழ்வு சட்ட விரோதமானதாகும்.

பிரதேசசபைப் பற்றுச்சீட்டின்றி மணல் ஏற்றப்படுமிடத்து 2000/= தண்டப்பணமும், தடைசெய்யப்பட்ட இடங்களில் மணல் ஏற்றுவோருக்கு 5000/= தண்டப்பணமும் அறவிடப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நிறுவனங்களும், பொதுமக்களும் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

திரு.கு.விக்ரர் ஜெயசிங்கம்,
விசேட ஆணையாளர்.
துணுக்காய் பிரதேசசபை.

(10024)



## 8 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாயின் மடியில்
04 ★ 03 ★ 1970



தாயக மண்ணில்
19 ★ 07 ★ 1996

### மேஜர் புலிக்குட்டி (கரி)

ஆனந்தராசா ஜெயமோகன்

புகையிரத நிலையவீதி, ஓமந்தை, வவுனியா

(முல்லை. ஓயாதஅலை தாக்குதலின் போது)

போரெடுத்து எதிரிப்படை
பாரழிக்க வருதல் கண்டு
தாய் நிலத்தைக் காக்கவென்று
அண்ணன் படையதனில் இணைந்து
- கொண்டு

புலிக்குட்டியாக நின்று
களங்கள் பல கண்டு வென்று
ஓயாத அலையில் அன்று
பாய்ந்து பகை அழிக்கச் சென்று

எதிரியின் குறியில் ஒன்று
உன் நெஞ்சைப் பிழந்ததன்று

குருதியது அலையாய்ச் சென்று
எதிரிபடையை அழித்து வென்று
ஆண்டெட்டு ஆன தின்று
உன் பிரிவை நினைவிற் கொண்டு
வாடுகிறோம் உறவுகள் இன்று.

தகவல்:
பெற்றோர், சகோதரர்கள், போராளிகள்.

(4638)

# தென்மராட்சி தெற்கு வலயப் பகுதிகளின் எஞ்சிய பகுதிகளையும் ஒப்படைக்க வேண்டும்

## - படைத்தரப்பிடம் யாழ்.அரச அதிபர் கோரிக்கை

**யாழ்.குடாநாட்டில் பெரும்போக நெற்பயிர்ச்செய்கை செப்ரெம்பர் மாதக் காலப்பகுதியிலிருந்தே ஆரம்பிக்கப்படுவதால் தென்மராட்சி தெற்குப் பகுதியில் படையினரது கட்டுப்பாட்டுப் பகுதியினுள் இருக்கும் எஞ்சிய வயற்பகுதிகளையும் படையினர் முன்னதாகக் கையளிக்கவேண்டு மென யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் படைத்தரப்பிடம் கோரியுள்ளார்.**

தென்மராட்சி தெற்கின் மறவன் புலோப் பகுதியில் கடந்த 4 வருடங் களுக்கு மேலாக அதி உயர் பாதுகாப்பு வலயமென்ற பெயரில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த சுமார் 450 ஏக்கர் வயல் நிலப்பரப்பு படைத் தரப்பால் நேற்றுமுன்தினம் வைபவ ரீதியாக யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விடுவிக் கப்பட்ட மறவன்புலோ கொல்லங் கிராய் பகுதியில் அமைக்கப்பட்டி ருந்த தற்காலிக பந்தலில் இக் கையளிப்பு இடம் பெற்றிருந்தது.

படையினரால் கண்ணிவெடிய கற்றுப்பட்ட பகுதி எனக் கூறியே குறித்த 450 ஏக்கர் வயல் நிலமும் நேற்றுமுன்தினம் கையளிக்கப் பட்டுள்ளது. இந்நிகழ்வில் குறித்த பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தின் 52ஆவது படைப்பிரி வின் கட்டளை அதிகாரி டி.ஆர். ஜெயவர்த்தன, தென்மராட்சிப் பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன், கமநல சேவைகள் திணைக்களத் தின் யாழ்.மாவட்ட ஆணையாளர் க.சுந்தரேசன் மற்றும் விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

# தீவுப்பகுதிகளுக்கான அம்பியுலன்ஸ் படகுச் சேவை வெகு விரைவில்

தீவகப்பகுதிகளுக்கான அம்பியுலன்ஸ் படகுச்சேவை அடுத்தமாதம் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யூ.என்.எச்.சி.ஆரின் நிதி யுதவியுடன் இச்சேவை நடாத்தப் படவிருப்பதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலாநிதி தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். புங்குடுதீவு, நயினாதீவு, அனலை தீவு, நெடுந்தீவு, எழுவைதீவு மக்களின் அவசரத் தேவைகளுக் காக சேவையில் ஈடுபடுத்தப்பட விருக்கும் இந்த அம்பியுலன்ஸ் படகு புங்குடுதீவு-குறிகாட்டுவான் துறையில் நிறுத்தி வைக்கப்பட் டிருக்கும் எனவும்,

படகுச்சேவை ஆரம்பிப்பதற் கான பூர்வாங்க வேலை தொடங்கி விட்டதாகவும் இதன் வெள்ளோட் டம் அடுத்த வாரம் நடைபெறும் என்றும் அவர் மேலும் கூறி யுள்ளார்.

# முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்த தேசிய எழுச்சிப்பேரவை நடவடிக்கை

யாழ்.குடாநாட்டில் உள்ள முன்பள்ளிகளின் தரத்தை மேம்படுத்துவதற் குரிய நடவடிக்கைகளை யாழ்.மாவட்டதேசிய எழுச்சிப் பேரவையினர் மேற்கொண்டு வருகின்றனர். கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இடம்பெயர்ந்து பாதிக்கப்பட்டுள்ள பிரதேச சிறார்களின் நன்மை கருதியே இதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் போரால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய பிரதேசங்களில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கற்பித்தல் பயிற்சிகளை வழங்கிவருவதுடன்முன்பள்ளி சிறார்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வருகின்றனர். (33)

# நெடுந்தீவில் மின்சாரத்தை விஸ்தரிக்க சிறிலங்கா மின்சாரசபை நடவடிக்கை

நெடுந்தீவு பிரதேச சபையூடாக இந்த வருடத்துக்கென நெடுந்தீவு கிழக்கு மத்திய பகுதிகளிள் மின்சார விஸ்தரிப்பு பின்தங்கிய வேலைக் குரிய மதிப்பீடுகள் சிறிலங்கா மின்சாரசபையினால் தயாரிக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிதிக்கமைய பிரதேசசபை சந்தியில் இருந்து வல்வை வீதியில் 400 மீற்றருக்கும் மாவிலித் துறைமுகத்தில் இருந்து அந்தோனியார் ஆலய செபநாயகபுர வீதியில் 400 மீற்றர் மின் இணைப்பு வழங்கவும். பற்றிமா, ஆலயச் சந்தியில் இருந்து போக்கடி வீதிக்குப் புதிய மின்கம்பங்கள் பொருத்தி மின்னிணைப்பு வழங்கவும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

# பொன். கணேசமூர்த்தியின் கவிதைநூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

பொன். கணேசமூர்த்தியின் 'துளித்துளி வைரங்கள்' கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச மண்டபத்தில் நமது ஈழநாடு நிர்வாக இயக்குநர் சிவமகாராஜா தலைமையில் நடைபெற்றது.

வாழ்த்துரைகளை யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் களான மாவைசேனாதிராசா, எம்.கே சிவாஜிலிங்கம் மற்றும் யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

வெளியீட்டு உரையினை யாழ். மாவட்ட அரசியற் துறைப்பொறுப் பாளர் இளம்பரிதி நிகழ்த்தினார்.

மதிப்பீட்டுரையினை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், எழுத்தாளர் காந்தன், தங்கவடி வேல், பரமநாதபிள்ளை ஆகி யோர் நிகழ்த்தினர். பதிலுரையினை நூலாசிரியர் பொன். கணேசமூர்த்தி நிகழ்த்தினார். (36)

# மோசமாகச் சேதமடைந்துள்ள நல்லூர் பண்டாரக்குளம் வீதி

யாழ்.நல்லூர் பிரதேசத்தில் உள்ள பண்டாரக்குளம் நீண்ட காலமாகப் புனரமைப்புக்கள் எது வும் செய்யப்படாத நிலையில் மிகமோசமாகச் சேதமடைந்த நிலையில் உள்ளது.

வீதியின் நிலைமை குறித்து யாழ். மாநாகரசபையினரிடம் அப்பகுதி மக்கள் பல தடவை முறையிட்டும் உரிய நடவடிக்கை கள் எடுக்கப்படவில்லை.

இதனால் இவ்வீதிவழியாகப் போக்குவரத்துச் செய்யும் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங் களையும் அனுபவித்து வருகின் றனர். (33)

## வலயமட்ட தமிழ்த் தினப்போட்டி

வடமராட்சி கல்வி வலயத்தின் வலய மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டி எதிர்வரும் 20,21,22,25, ஆம் திகதிகளில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.இதற்கு கோட்டமட் டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளது. (33)

# ஆந்திராவில் வீதி விபத்து 14 பேர் பலி; மூவர் ஆபத்தான நிலையில்

ஆந்திரா மாநிலத்தில் நேற்று நிகழ்ந்த வீதி விபத்தில் தமிழகத்தைச் சேர்ந்த 14 பேர் பலியாகியுள்ளனர். மூவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திராவில் சித்தூர் அருகே பேருந்தும், காரும் நேருக்குநேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

# தீவிர வாதத்தை கூண்டோடு ஒழிக்க பாக்.புதிய யுக்திகளைக் கையாளும்

## சனாதிபதி பர்வேஸ்முஷாரப்



தீவிரவாதத்தை அடியோடு ஒழிக்க பாகிஸ்தான் புதிய யுத்தி களைக் கையாண்டு வருவதாக பாக். அதிபர் பர்வேஸ்முஷாரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிப்ர் பர்வேஸ் முஷாரப் கடந்த ஒருவாரகாலமாக துருக்கியில் சுற்றுப்பயணம் செய்து அங்கு ஓய்வு எடுத்து வருகிறார்.

இதையடுத்து அங்கு வெளிவரும் துருக்கிய நாட்டுத் தினசரி பத்திரிகையான ஹுரியத்துக்கு அவர் அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது;

நீண்டகாலமாகவும் குறுகிய கால அளவிலும் கூட பாகிஸ்தான் தீவிரவாதத்தை அடியோடு வேர றுக்க புதிய வழிகளில் தீவிரமாக போராடி வருகிறது. விரைவில் தீவிரவாத தாக்குதலுக்கு காரணமா ணவர்களை பிடிப்பதற்கான நடவ டிக்கைகளை பாக்.அரசு எடுக்கும்.

ஏனெனில் தீவிரவாதிகள் 3குழுக்களாக இயங்கிவருகிறார் கள் ஒரு குழுத்தாக்குதல்களை நடத்துவது, மற்றொரு குழுத் தாக்குதல்களுக்கு திட்டம் வகுப் பது, 3ஆவது குழு இந்த தீவிர வாத செயல்களுக்கு துணை போவது.

இந்த3ஆவது குழுவைச்சேர்ந்த வர்களை நாம் முதலில் கண்டு பிடித்து அழிக்காவிட்டால் தீவிர வாதத்தை நம்மால் கூண்டோடு வேரறுக்க முடியாது. தாக்குதல் நடத்துபவர்களை அழித்தால் நம்மால் மரத்தின் இலைகளை மட்டுமே வெட்ட முடியும். தாக்கு தலுக்கு திட்டம் தீட்டுபவர்களை அழித்தால் நாம் மரத்தின் கிளை களை மட்டுமே வெட்டமுடியும். எனவே தீவிரவாத தாக்குதல் களுக்கு எல்லாம் மூலகாரணமாக இருப்பவர்களை கண்டுபிடித்து அழித்தால் தான் நம்மால் தீவிர வாதம் என்கிறமரத்தையே வேரறுக்க முடியும் என்றார். முஷாரப்.

# அன்னிய முதலீடு உட்பட அனைத்துப் பிச்சினைக்கும் கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சு நடத்தப்படும்

(புதுடில்லி)

தொலைத் தகவல் தொடர்பு, காப்பீடு மற்றும் விமானப்போக்கு வரத்து துறைகளின் நேரடி அன்னிய முதலீடு உள்ளிட்ட அனைத்துப்பிரச்சினைகளுக்கும் கூட்டணிக்கட்சிகளுடன் பேச்சுவார்த் தைகள் மூலம் தீர்வு காணப்படு மென்று பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.புதுடில்லியில் செய்தி யாளர்களிடம் பேசிய பிரதமர் மன்மோகன்சிங் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு சுமுகமாக செல்லும என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## இந்தியா விஜயம்

இந்தியாவின் உள்ளூராட்சி நிர்வாக அமைப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் குறித்து நேரில் பார்வையிட பாகிஸ்தானில் இருந்து உள்ளூராட்சி அமைப்புக்களைச் சேர்ந்த 29 பிரதிநிதிகள் குழு இந்தி யாவுக்கு விஜயம் மேற்கொண் டுள்ளது.

# அதிகாரிகளை மாநில அரசு அடிக்கடி மாற்றம் செய்வது அரசின் முழு நிர்வாகத்தையும் சீர்குலைத்துவிடும்

## - பிரதமர் மன்மோகன்சிங்

மாநில அரசில் முக்கியமான பணிகளில் பணிபுரியும் அதிகாரிகளை அடிக்கடி மாற்றம் செய்யக்கூடாது என்றும், அவர்கள் தொடர்ந்து ஒரே துறையில் பணிபுரிவதை உறுதிப்படுத்த வேண்டும் என்றும் பிரதமர் மன்மோகன்சிங் கூறியுள்ளார்.இது குறித்த மாநில முதலமைச்சர்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் புதுடில்லியில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

திறமையான நிர்வாகத்திற்கும், பொதுச் சேவைகளைச் செய்வதற்கும், அவர்கள் ஒரேதுறையில் பணிபுரிவது சிறந்தது என்றும் ஒரே துறையில் பணிபுரிவதால் அனுபவம் சிறப்பாக அமையும் என்று கூறியுள்ள அவர்,

அதிகாரிகளை மாநில அரசுகள் அடிக்கடி பணி மாற்றுவதால் அவர்களது செயற்பாட்டை பாதிப்பதோடு,அரசின் முழு நிர்வாகத்தையும் கூட சீர்குலைத்துவிடும் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.


# வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம்:- 2004 ஜீலை 19 முதல் 29 வரை
நேரம்:- தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம்:- யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

❋சகலருக்கும் இலங்கை நூல்களிற்குப் 10% கழிவு வழங்கப்படும்.
❋பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
❋மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை, நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)

# ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி; பாகிஸ்தானுக்கு இரண்டாவது வெற்றி



ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று ஹொங்கொங் அணியைப் பாகிஸ்தான் தோற்கடித்தது.

ஆறு நாடுகள் கலந்து கொள்ளும் மேற்படி போட்டியின் குழு 'ஏ'இற்கான மூன்றாவது லீக் போட்டியில் ஹொங்கொங் அணியை எதிர்த்து ஆடிய பாகிஸ்தான் அணி 173 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

எஸ்.எஸ்.ஸி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 5 விக்கெட்டுக்களை இழந்து 343 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் யூனிஸ்ஹான் 143 ஓட்டங்களையும், சொஹைப் மாலிக் 118 ஓட்டங்களையும் மிகச் சிறப்பாகப் பெற்றுக் கொடுத்தனர்.

பதிலுக்கு ஆடிய ஹொங்கொங் அணி 44.1 ஓவரில் 165 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. இப்போட்டி மழை காரணமாக 47 ஓவருக்கு மட்டுப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# 200 மீற்றர் தகுதிகாண் போட்டியிலிருந்து ஓட்டவீராங்கனை மரியன் ஜோன்ஸ் விலகினார்



28 ஆவது ஒலிம்பிக் போட்டிக்கு இன்னமும் 25 நாட்களே உள்ள நிலையில்

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளின் 200 மீற்றர் ஓட்ட நிகழ்வில் பிரபல அமெரிக்க வீராங்கனை மரியன் ஜோன்ஸ் பங்கு பற்றுவது தொடர்பாக சந்தேகம் எழுந்துள்ளது.

அமெரிக்க தகுதிகாண் போட்டிகளில் இருந்து விலகிக் கொண்டதை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற 200 மீற்றர் ஓட்ட தகுதிகாண் போட்டியில் உடற்சோர்வு காரணமாக மரியன்ஜோன்ஸ் விலகிக் கொண்டார்.

இதனை அடுத்து எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கு நேரடியாகத் தெரிவு செய்யும் வாய்ப்பை அவர் இழந்துள்ளார்.

ஏற்கனவே 100மீற்றர் ஓட்ட நிகழ்வில் பங்கு பற்றும் தகுதியை இழந்துள்ள மரியன்ஜோன்ஸுக்கு இது பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

நீளம் பாய்தல் போட்டியில் மட்டுமே இதுவரை எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் தகுதியை மரியன் ஜோன்ஸ் பெற்றுள்ளார்.

அமெரிக்க மெய்வல்லுனர் சங்கத்தின் கைகளிலேயே 100 மீற்றர் மற்றும் 200 மீற்றர் போட்டிகளில் மரியன் ஜோன்ஸ் பங்குபற்றுவது தொடர்பான இறுதி முடிவு தங்கியுள்ளது.



பெருவில் நடைபெறும் கோபா அமெரிக்க கால்பந்துப்போட்டியில் பங்குபற்றும் கொலம்பியாவின் சொஜியோ ஹிரேரா கோஸ்ராரிக்காவின் டக்ளஸ் சிகுரியாவிடமிருந்து பந்தைப்பறிக்க முயல்கிறார்.





# சிம்பாப்வே கிரிக்கெட் பிரச்சினைக்கு தீர்வுகாண வீரர்களின் முடிவை அறிவிக்க காலக்கெடு

சிம்பாப்வே கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பது குறித்து விவாதம் நடத்துவது பற்றிய சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் முடிவு பற்றி வரும் புதன்கிழமைக்குள் சிம்பாப்வே அணியில் இருந்து நீக்கப்பட்ட வீரர்கள் தங்களது முடிவை அறிவிக்க வேண்டும் என்று கெடு விதிக்கப்பட்டுள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் யூனியனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அந்த அணியைச் சேர்ந்த 15 வீரர்கள் அதிரடியாக நீக்கப்பட்டனர். இதனால் 2ஆம் நிலை வீரர்களுடன் சிம்பாப்வே விளையாடியது.

இந்த நிலையில் இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து விவாதம் நடத்தி மத்தியஸ்தம்செய்ய சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் நீக்கப்பட்ட வீரர்களுக்கு ஆலோசனை வழங்கியது. இது குறித்து தங்களுடைய முடிவை அறிவிக்க நீக்கப்பட்ட வீரர்களுக்கு வரும் புதன்கிழமை வரை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் கெடு விதித்துள்ளது.

இந்தத் தகவலை நீக்கப்பட்ட வீரர்களின் வழக்கறிஞர் கிரிஸ் வென்சுராஸ் தெரிவித்துள்ளார். சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் தலைமை நிர்வாகி மால்கம்ஸ் பீடுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக வென்சுராஸ் தெரிவித்தார். இந்த ஆலோசனை குறித்து வீரர்கள் என்ன முடிவு எடுக்கப்போகிறார்கள் என்பது குறித்து தனக்குத் தெரியாது என்றும் வென்சுராஸ் கூறினார்.

# கால்பந்து ,மென்பந்து சுற்றுப்போட்டியில் தாளையடி சென். அன்ரனிஸ் சம்பியன்



வருடா வருடமாக வடமராட்சி கிழக்கு சக்திவேல் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்பட்டுவரும் உதைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியிலும், மென்பந்து சுற்றுப்போட்டியிலும் தாளையடி சென்அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக் கிண்ணங்களை தமதாக்கிக் கொண்டது.

கடந்த வெள்ளிக்கிழமை 4.30 மணியளவில் சக்திவேல் விளையாட்டுக்கழக மைதானத்தில் தேசியக் கொடியேற்றலுடன் சம்பிரதாய பூர்வமாக நிகழ்வுகள் ஆரம்பமாகின.

22 கழகங்கள் பங்கு பற்றி இறுதிப்போட்டிக்கு தெரிவாகிய தாளையடி சென் அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் ஆழியவளை செந்தமிழ் விளையாட்டுக்கழத்திற்கும் இடையில் உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

நிர்ணயிக்கப்பட்ட போட்டி நேர முடிவில் இரு அணிகளும் ஒவ்வொரு கோல்களைப் போட்டு சமநிலையில் இருந்ததால் தண்டஉதை அறிமுகப்படுத்தப்பட்டது. இதில் 4-3 என்ற கோல்கணக்கில் தாளையடி சென் அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீரனாக தாளையடி விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த யோ.செல்டன் தெரிவு செய்யப்பட்டார். அன்று காலை நடைபெற்ற மென்பந்து சுற்றுப்போட்டியில் ப.ரெமிசன் சிறந்த விளையாட்டு வீரனாக தெரிவு செய்யப்பட்டார். (தீ)

# ஆசியக்கிண்ணத்தைக் கைப்பற்றும் அணி ஐ.சி.சி.தரப்படுத்தலில் முன்னிலைபெறும்

தற்போது சிறிலங்காவில் நடைபெற்றுவரும் ஆசியக் கிண்ணப் போட்டிகளில் சம்பியன் கிண்ணத்தைக் கைப் பற்றும் அணி வரும் ஓகஸ்ட் மாத த்தில் நடைபெறவிருக்கும் சர்வதேச கிரிக்கெட் சபையின் தரப்படுத்தலின் போது முன்னிலை வகிக்கலாம்.

தற்போது தரப்படுத்தலில் சிறிலங்கா, இந்தியா, பாகிஸ்தான் அணிகள் முறையே 4ஆம், 5ஆம், 6ஆம் இடங்களைப் பெற்றுள்ளன. இப்போட்டிகளில் சிறிலங்கா அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்றால் 2ஆம், 3ஆம் இடங்களைப் பெற்றுள்ள தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளின் இடத்தைப் பிடித்துவிடும். தென்னாபிரிக்கா 2002ஆம் ஆண்டிலிருந்து 2ஆம் இடத்தை தக்கவைத்து வருகின்றது.

அடுத்ததாக பங்களாதேஷ் அணி இப்போட்டிகளில் பங்கேற்கும் ஹொங்கொங் அணியை வென்றால் இப்போட்டித் தொடரில் இரண்டாம் நிலைக்கு வந்து சர்வதேச மட்டத்தில் ஒன்றிரண்டு புள்ளிகளைப் பெற்று முன்னேறலாம் என சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

I.C.C தரவரிசை

| | |
|---|---|
| அவுஸ்திரேலியா | -136 |
| தென்னாபிரிக்கா | -113 |
| நியூசிலாந்து | -113 |
| சிறிலங்கா | -110 |
| இந்தியா | -107 |
| பாகிஸ்தான் | -106 |
| இங்கிலாந்து | -101 |
| மேற்கிந்தியத் தீவு | -101 |
| சிம்பாப்வே | -62 |
| கென்யா | -28 |
| பங்களாதேஷ் | -02 |

## சிறிலங்கா அணிக்கு வெற்றி

ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியின் குழு B இற்கான இந்திய சிறிலங்கா அணிகளுக்கிடையிலான பரபரப்பான லீக் போட்டியில் சிறிலங்கா அணி 13 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய சிறிலங்கா 4 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களைப்பெற்றது. பதிலுக்கு ஆடிய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

# சிறப்புற நடைபெற்ற இளையோர் கால்பந்து இறுதிநாள் நிகழ்வு

தமிழீழ விளையாட்டுத் துறையினரால்மேஜர் முரளி நினைவாக இரண்டாவது தமிழீழத் தேசிய இளையோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் 18.07.2004 ஞாயிறு காலை 9.00 மணிக்குத் தேசியக் கொடியேற்றலுடன் ஆரம்பமாகியது.

தமிழீழ விளையாட்டுத்துறைச் செயலர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சுவிஸ் உதைபந்தாட்ட அணியின் முகாமையாளர் ... தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். ஈகச்சுடரினை திருமலை விளையாட்டு அலுவலர் ஜோன் பிள்ளை, அம்பாறை அணியின் பயிற்றுனர் ஜனாப் பைசர் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து 14 வயதுக் குட்பட்டோருக்கான அரையிறுதிப் போட்டிகள் ஆரம்பமாகின. இதில் சுவிஸ் அணி 4-0 என்ற கோல் கணக்கில் அம்பாறை அணியை வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. இதில் ம.சிந்தூஸ்கர் மூன்று கோல்களையும், சி.சுகந்தன் ஒரு கோலையும் போட்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற அடுத்த அரையிறுதிப் போட்டியில் யாழ். அணி 2-1 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி அணியை வென்று இறுதிப்போட்டிக்குத் தெரிவாகியது. யாழ். அணியின் சார்பில் பிரதாப், சதீஸ்வரன் ஆகியோரும், கிளிநொச்சி அணியின் சார்பில் த.கஜேந்திரனும் கோல் போட்டனர்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக ஜனாப் முகமட் றிஸ்லி, திருவாளர் ஆர்னோல்ட், ரங்கன், அஜித், ஜோண்பிள்ளை, கிறிஸ்ரி, ம.சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர்.

பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமான மாலை நேர போட்டியின் முதல் போட்டியாக 19 வயதுக் குட்பட்ட அணிக்கான போட்டியில் யாழ்ப்பாண அணி திருகோணமலை அணியை 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் தோற்கடித்து வெற்றிக்கிண்ணத்தைச் சுவீகரித்தது

யாழ் அணியில் வி. கமிலஸ், சி.றொசாந்தன், ஆகியோரும், திருமலை அணியில் A.N ராஜீவ்ஸ்டீல்வும் கோல் போட்டனர்.


அடுத்து 17 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் அம்பாறை அணியை எதிர்த்து யாழ். அணி மோதியது. இதில் அம்பாறை அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இக்கோலினை T.L.ஷாகான் போட்டார்.

அடுத்து 14 வயதுக் குட்பட்ட போட்டியில் சுவிஸ் அணியினை எதிர்த்து யாழ் அணி மோதியது. இதில் யாழ். அணி 1-0 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது. இக்கோலினை பி.ஜெ. ரோன் போட்டார்.

இறுதிப்போட்டியாக மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது. இதில் யாழ்ப்பாண அணியினை எதிர்த்து முல்லைத்தீவு அணியினர் மோதினர். இதில் முல்லைத்தீவு அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. முல்லை அணியின் சார்பில் இளமகள் 2 கோல்களையும் சுடரிணி 1 கோலினையும் போட்டனர்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக ஜனாப், முகமட் றிஸ்லி, பைசர், திரு வாளர்கள் A.Sகுண ரட்ணம்.கிறிஸ்ரி பு R.டானியல், கலாரதன், ம.சிவலிங்கம் ஆகியோர் கடமையாற்றினர். தொடர்ந்து பரிசளிப்பு விழா நடைபெற்றது.

## சிந்தனைக்கு



அனைத்துத் தமிழ் மக்களும் ஒரே இனம் என்ற தேசாபிமான உணர்வுடன் போராட்டத்தில் பங்கு கொண்டால், எமது இலட்சியம் வெற்றி பெறுவது நிச்சயம்

தமிழீழ தேசியத்தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை, கிளிநொச்சி. 19-07-2004

தொலைபேசி } 060-2213244
தொலைநகல் } 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com

## இருண்ட காலத்தை நோக்கி...!

"சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக அரசாங்கம் இதுவரை சரியானதொரு தீர்மானம் எடுக்க முடியாமல் திண்டாடுகின்றபடியால் இந்த நாடு இருண்ட காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றது" என்ற முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் பீரிஸ் அவர்களின் கூற்று-மிகைப்படுத்தப்பட்டதோ அன்றி கட்சி சார்ந்த குற்றச்சாட்டோ அல்ல.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக அரசாங்கமோ சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ உறுதியானதொரு முடிவு எடுக்க முடியாது தடுமாறுகின்றது/ தடுமாறுகின்றார் என்பது நிராகரிக்கப்படமுடியாத யதார்த்தமாகவுள்ளது. இதனை அரசாங்கத்தரப்பினரின் அறிவிப்புக்களில் உள்ள முரண்பாடுகளே வெளிப்படுத்துபவையாகவுள்ளன.

ஆளும் கூட்டணியினரில் ஒரு தரப்பினரின் கூற்றிற்கு ஒரு தரப்பினரின் மறுப்பும், ஒருவரின் கூற்றிற்கு மற்றொருவரின் மறுப்புமாக ஒன்றிற்கொன்று முரண்பட்ட நிலைமை உள்ளமை வெளிப்படையான தொன்று. இத்தகையதொரு நிலையில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் என்பது காலால் உதைபடும் பந்து போன்றதாகிவிட்டது.

ஐ.ம.சு முன்னணி அரசாங்கத்தின் தலைவியும், சனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சுவார்த்தை குறித்தும், புரிந்துணர்வு உடன்பாடு குறித்தும் எதனைப் பேசினாலும் சரி- தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டைத்தீர்மானிக்கும் சக்தியாக ஜே.வி.பி.யே உள்ளது.

ஜே.வி.பி.யின் தற்போதைய அறிவிப்புக்கள் இடைக்கால நிர்வாகத்திற்கோ அன்றி சமாதானப் பேச்சுவார்த்தைக்கோ ஆதரவானதல்ல என்பது மட்டுமல்ல. இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப்பரவலாக்கல் என்பது வழியல்ல என்பது அதன் நிலைப்பாடகவுள்ளது. அவ்வாறானால், இன்றுள்ள கேள்வியானது "இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன"? என்பதே.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு என்பதை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால் ஜே.வி.பி அதனை நிராகரிக்கும் நிலையில் -அக்கட்சியில் தங்கியுள்ள அரசாங்கத்தினால், சனாதிபதியினால் அதனை எதிர்த்து தீர்மானங்களை மேற்கொள்ள முடியுமா? என்பதே இன்றுள்ள வினாவாகும்.

ஏனெனில் சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறை தீர்வா? அன்றி ஆட்சி அதிகாரமா? என்ற கேள்வி எழுகையில் ஆட்சி அதிகாரம் என்பதே அவரது முதல் தெரிவாகவும், முடிவாகவும் இருக்கும் என்பதிலும் எந்தவித சந்தேகத்திற்கும் இடம் இருக்க மாட்டாது.

இந்த நிலையில் பேராசிரியர் பீரிஸ் கூறியது போன்று நாடு இருண்ட காலத்தை நோக்கிச் செல்கின்றது என்பதில் தவறு எதுவுமில்லை. ஏனெனில் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படாது போனால் நாடு இருண்டகாலத்தை நோக்கிப் போவதென்பது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும்.

ஏனெனில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்திலேயே சிறிலங்கா அரசு எதிர்நோக்கியுள்ள பாரிய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. குறிப்பாக யுத்தம் இல்லாது போனால் மட்டுமல்ல, சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடரப்படாது போனாலும் கூட சிறிலங்கா அரசு எதிர்நோக்கும் நெருக்கடிகளில் இருந்து விடுபடுவதற்கு தேவையான நிதியுதவி கிடைக்கப்போவதில்லை.

ஆகையினால் சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படாததொரு சூழ்நிலையில் இருண்ட காலம் நோக்கிப் பயணிப்பதென்பது தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும். சனாதிபதி சந்திரிகா சூழ்நிலையின் கைதி போன்றதொரு நிலையில் இருப்பினும் கூட, நாட்டை இவ்வாறு வழிநடத்திச் செல்வதற்கான பொறுப்பை அவரே ஏற்றல் வேண்டும்.

தமது தவறுக்கெல்லாம் கடந்த கால ஆட்சியாளர்களைக் குறைகூறுவது சனாதிபதி சந்திரிகாவிற்கும், அவரது சகாக்களுக்கும் வழமையாகிவிட்டதொன்றாகிலும், அவ்வழிமுறையால் அவருக்கு வெற்றிகிட்டிவிடப்போவதில்லை. ஏனெனில் இருண்ட காலத்திற்குள் இட்டுச்செல்பவர்களை மக்கள் என்றும் ஆதரித்து நின்றதில்லை. இவ்வரலாற்றுப் பாடம் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு அனுபவ ரீதியாகவே உண்டு என்பதை சனாதிபதி சந்திரிகா மறந்து போனால், அது அவர் இழைத்த தவறாகவே இருக்கும்.

# அல்லைக்குளத்தில் வாய்க்காலை மறித்து சட்டவிரோதக் குடியேறிகளுக்கு நீர்வழங்கல்

## துரைரட்ணசிங்கம் பா.உ ஆட்சேபம்

திருகோணமலை மூதூர் பிரதேசத்தில் அல்லைக்குள நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் வடதுகரை, இடதுகரை பிரதான வாய்க்காலை மறித்து பல்லவல என்னுமிடத்தில் அணைக்கட்டு ஒன்றைக்கட்டி அத்துமீறிக் குடியேறியவர்களின் காணிகளுக்கு நீர்ப்பாசனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் க.துரைரட்ணசிங்கம் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபருக்கு முறையிட்டுள்ளார்.

"அல்லைக்குளத்துக்கு நீர் மகாவலி மூலம் கிடைக்கின்றது. இப்போது மகாவலி நீர் போதுமான அளவு அல்லைக்குளத்துக்கு வருவதாக இல்லை. இதனால் அல்லை பிரதான வாய்க்கால் மூலம் வயல் நிலங்களுக்கு போதுமான நீர் வழங்க முடியாதநிலை நிலவு கின்றது. இச்சந்தர்ப்பத்தில் அல்லைத்திட்டப் பிரதான வாய்க்காலை மறித்து சட்டவிரோத குடியேற்ற நிலத்துக்கு நீர்ப்பாசனம் வழங்கும் இம்முயற்சியைத் தடுத்து நிறுத்த பொலிஸ் மூலம் தாங்கள் எடுத்த நடவடிக்கை பயனளிக்க வில்லை. தொடர்ந்தும் சட்டவிரோத நீர்விநியோகம் தொடர்கிறது. இதனைத் தடுத்துநிறுத்த நடவடிக்ளைக எடுக்கவேண்டும்" என்று பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளார். (25)

# சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் முதலில் ஐ.ம.சு. விற்குள் இணக்கப்பாடுதேவை

## ராஜித சேனாரட்ண தெரிவிப்பு

சமாதான செயற்பாடுகள் தொடாபாக ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில அங்கம் வகிக்கின்ற கட்சிகளுக்குள் இணக்கம் காணப்பட வேண்டுமென ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண தெரி வித்துள்ளார்.

ஜே. வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசணை தொடர்பாக அண்மையில் தெரிவித்திருந்த கருத்துக்கள் தொடர்பாக கூறுகின்ற வேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கூறுகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அன்றும் எதிர்த்தோம், இன்றும் எதிர்க்கிறோம் என ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கூறியிருந்தார். அவர்கள் தொடர்ந்தும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தையும் எதிர்த்தார்கள் இடைக்கால நிர்வாக சபையையும் எதிர்த்தார்கள அதுமட்டுமல்ல அதிகாரப்பகிர்வையும் எதிர்த்தனர்

ஆயினும் சனிபதியின் நிலைப்பாடு வேறு. அவர்கள் இப்போது சர்வகட்சி மாநாட்டை நடத்துவதற்கு எண்ணியுள்ளனர். அதனை நடத்துவதற்கு முன்னர் தமது அரசிற்குள் உள்ள ஒரு நிலைப்பாட்டை வெளியிட வேண்டாமா அத்து டன் இதுதான் எங்கள் தீர்வு இதனை விரும்புகிறீர்களா?என தமது நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டாமா? என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சர் தி.மு.ஜெயரத்ன கூறுகையில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தை நடத்துமாறு நாளுக்குநாள் அறிக்கைகள் விடப்படுகின்றன. இடைக்கால நிர்வாகம் என்ற வார்த்தையை ஓர் வரையறைக்குள் நோக்காது இடைக்கால நிர்வாகம் என்றால் என்ன? என முதலில் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந் நிர்வாகம் என்பது எவ்வாறான அதிகாரங்களைக் கொண்டது. எவ்வாறு செயற்படவுள்ளது? இதற்கு யார் தலைமை தாங்குவது? மத்திய அரசாங் கத்திற்குள்ள அதிகாரம் என்ன? என்பதனையும் அதன் செயற்பாட்டுத் தன்மைகுறித்தும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

# அரசுக்கு தொண்டமான் ஆதரவு வழங்குவதில் ஐ.தே.க.வுக்கு எவ்விதத் தடையுமில்லை

## ஐ.தே.க பதில் செயலாளர் தெரிவிப்பு

தமது கட்சியுடன் இணக்க ஒப்பந்தம் செய்து கொண்ட போதிலும் ஆறுமுகம் தொண்டமான்,ரவூப் ஹக்கீம் ,மற்றும் பி.சந்திரசேகரன் ஆகியோர் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில் எவ்விதத் தடையுமில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பதில் செயல் மில்ரோய் பெர்ணான்டோ தெரிவித்துள்ளார். எனினும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றின் போது இந்த மூன்று தலைவர்களும் அரசாங்கததிற்கு ஆதரவளிப்பதில் இருந்து விலகிக் கொள்ள வேண்டும் என்பது தமககிடையிலான ஒப்பந்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்திற்கு ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆதரவு வழங்கப்போவதாக வெளி யான தகவல்களுக்கு மத்தியிலேயே தமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின்பதில் செயலர் வெளியிட்டுள்ளார். (32)

# குற்றவாளிகளை சித்திரவதை செய்யும் பொலிசார் மீது நடவடிக்கை இல்லை

## பொலிஸ் ஆணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

குற்றவாளிகளை சித்திரவதை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுப்பதில்லை யென சிறிலங்காவின் தேசிய பொலிஸ் ஆணைக்குழு பொலிஸ்மா அதிபர் மீது குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து ஆணைக்குழுவின் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில் அதிக வதை நடவடிக்கைகள் இன்ஸ்பெக்டர் தர அதிகாரியின் கீழுள்ள உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப் படுகின்றன. அத்துடன் இத்தகையோர் மீது நடவடிக்கை எடுப்பதற்கான உடன்பாடு எதுவும் ஆணைக் குழுவிடம் இல்லை.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் பொலிசார் கொண்டு வரப்பட்டால் அவர்களின் வதை நடவடிக்கைகள் குறைக்கப் படுமென்றும் அவர் கூறியுள்ளார்.

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக பேராசிரியர் வழக்குத் தாக்கல்

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராக இங்கிலாந்தில் கன்ரபரி பல்கலைக் கழக நீதித்துறைப் பேராசிரியர் தினேஸ்குணசேகர வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக அறிவித்துள்ளார். கடந்த வாரம்தாம் இது சம்பந்தமாக சமாதான தூதுவர் எரிக்சூல்ஹெய்மிடம் பல யோசனைகள் அடங்கிய நகல் ஒன்றை கையளித்துள்ளதாகவும், அந்த நகலுக்கு அவரிடம் இருந்து வரும் பதிலைஎதிர்பார்த்த பின் வழக்குத் தொடரப்படும் என தினேஸ்குணசேகர தெரிவித்துள்ளார்.



பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.நல்லூர் சட்டநாதர் கோவில் வாசலில் இருந்து ஆரம்பித்த கிராமியக் கலை,பண்பாட்டு ஊர்வலம் முத்திரைச்சந்தி ஊடாக நல்லூர் கோவில் வாசலில் நிறைவடைந்தது. இந்த ஊர்வலத்தின் சில காட்சிகள். (படம்:- செல்வா)

- சமாதான முயற்சிகள் குறித்து -

## ஐ.தே.க.சார்பில் முடிவெடுக்கும் பொறுப்பு பேராசியர் ஜி.எல்.பீரிஸிடம் ஒப்படைப்பு

சமாதான முயற்சிகளில் ஐக்கிய தேசியக்கட்சியின் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பாக முடிவுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜீ. எல் பீரிஸிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கான முடிவை கட்சியின் நிறைவேற்றுக் குழு எடுத்துள்ளது. சமாதான முயற்சிகளில் அதிக அக்கறையுடன் அதிக காலம் ஈடுபட்டவர் என்ற அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதே வேளை தமது கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சனாதிபதி சந்திக்கவுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியான போதும் இன்னும் அதற்கான அழைப்புகள் தமக்குக்கிடைக்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது

## ஏ-9 வீதியில் இரு பாலங்கள் திருத்த வேலைகள் ஆரம்பம்

ஏ-9 வீதியில் பரந்தன்- ஆனையிறவிற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள 263/1, 263/2 இலக்கப் பாலங்களுக்கான திருத்த வேலைகள் இன்று தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளன. வாகனப் போக்குவரத்திற்காக பாலங்களின் பக்கத்தால் சமாந்தரமாக அமைக்கப்பட்ட தற்காலிக வீதிகள் (பைறோட்) பாவனைக்காகத் திறக்கப்பட்டுள்ளன. பக்க வீதியால் நீண்ட கொள்கலன்கள், பாரிய எரிபொருள் தாங்கிகள், பயணிகளை ஏற்றிச்செல்லும் பாரிய பேருந்துகள் செல்லும் போது எச்சரிக்கையாகவும், நிதானமாகவும், அவதானமாகவும் செல்வதை உறுதிப்படுத்திக் கொள்வதோடு வாகனங்கள் பக்க வீதியால் விலக இடம் போதாமையால் ஒவ்வொன்றாகச் செல்லுமாறும் பெய்லி பாலங்களின் திட்டப் பணிப்பாளர் சகலரையும் கேட்டுக்கொள்கிறார்.

## துப்பாக்கி விற்பனை

விலங்குகளினால் ஏற்படும் அழிவிலிருந்து பயிர்களைக் காப்பதற்காகப் பொருத்தமானவர்களுக்குத் துப்பாக்கிகள் விற்பனை செய்யப்படவுள்ளன. தேவைப்படுவோர் தத்தமது பகுதிக்காவல் பணிமனையில் வேண்டுகைப்படிவங்களைப் பெற்று நிறைவு செய்து, கிராம சேவகரின் பரிந்துரையுடன் பகுதிக் காவல்பணிமனையில் ஒப்படைக்க வேண்டும். காவல்துறைக் கண்காணிப்பாளரால் பரிந்துரைக்கப்படுவோருக்குக் கரடிப்போக்கு, கிளிநொச்சியில் அமைந்துள்ள பாண்டியன் வாணிபம் துப்பாக்கிகளை விற்பனை செய்யும். துப்பாக் கியைப் பயன்படுத்துவதற்கான உரிமம் காவல்துறையால் வழங்கப்படும். வேண்டுகைப்படிவங்களை நாளை முதல் காவல்பணி மனைகளில் பெற்றுக் கொள்ளலாம். துப்பாக்கி ஒன்றின் விலை ரூபா 20.000/=

## சிறிலங்காவுக்கு 150 மில்லியன் கடனுதவி

சிறிலங்கா அரசாங்கத்திற்கு இந்திய அரசு 150 மில்லியன் அமெரிக்க டொலர்களை கடனுதவியாக வழங்கியுள்ளது.

சிறிலங்காவின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த கோரிக்கையின் பிரகாரமே இந்த கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கடன் உதவி மூலம், சிறிலங்கா அரசு இந்தியாவில் இருந்து எரிபொருள் இறக்குமதியை மேற்கொள்ளும் எனத் தெரியவந்துள்ளது. குறைந்த வட்டி வீதத்தில் ஏழு வருட காலத்தில் மீள அளிப்பதற்கு ஏதுவாகவே இந்த கடன் உதவி இந்திய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்ட வீரர்களை தமிழ்ச்செல்வன் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி நாளாகிய நேற்று போட்டியில் பங்குபற்றிய வீரவீராங்கனைகளைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் சந்தித்து பாராட்டி வாழ்த்தியுள்ளார்.

நேற்று முன்தினம் ஆரம்பமாகிய போட்டிகள் நேற்று மாலையுடன் முடிவுற்று, வெற்றி பெற்ற வீரவீராங்கனைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சுவிஸ் நாட்டிலிருந்து வருகைதந்த உதைபந்தாட்ட வீரர்கள் முல்லைத்தீவு மாவட்ட உதைபந்தாட்ட அணியினரை ஊக்குவிக்கும் முகமாக உதைபந்தாட்டத்திற்கு பயன்படுத்தும் காலணிகளையும், பணமாக 15000 ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (கு)

-புலிகளுடனான பேச்சுவார்த்தைக் குழுவில்-

## எதிர்க்கட்சிகளை இணைக்க சனாதிபதி சந்திரிகா முடிவு

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான எதிர்காலப் பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்க தூதுக் குழுவில் எதிர்கட்சிகளின் பிரதிநிதிகளையும் பங்கேற்க வைப்பது என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கொள்கை இணக்கம் கண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் அடிப்படையிலேயே சனாதிபதி சமாதான முயற்சிகள் தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உட்பட்ட ஏனைய கட்சித் தலைவர்களை சந்திக்க முடிவெடுத்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏறகனவே சமாதானப் பேச்சுவார்த்தை முயற்சிகள் தொடர்பில் அரசாங்கக் கட்சிகளின் பிரதிநிதிகளை இணைத்து ஆலோசனைச்சபை ஒன்றை நிறுவப் போவதாக சனாதிபதி அறிவித்தமையையும் அறிந்த விடயமாகும்.

இந்த நிலையிலேயே அரசாங்கத்தின் புதிய திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இது மறுபுறத்தில் பார்க்கும்போது தேசிய அரசாங்கத்துக்கு ஈடான செயற்திட்டமாகும் எனக்கருதப்படுகிறது. (32)

### யாழ்...

குக் கிடைத்த தகவலொன்றையடுத்து மீட்கப்பட்ட அந் நடுகல் மீண்டும் அதே பழைய இடத்தில் நாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை நடுகல் வீசப்பட்டிருந்த இடத்திற்கு அருகாமையில் "மாணவர் படை" எனும் துண்டுப்பிரசுரமொன்றும் வீசப்பட்டிருந்தது.

இதனிடையே மேற்படி நினைவு நடுகல் நாட்டப்பட்டுள்ள பகுதிக்கும் நீதிமன்ற வளாகம் நிறுவப்பட்டுள்ள பகுதியிலுள்ள வேலைத்தளத்திற்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி புதன் கிழமை குடா நாட்டிற்கு விஜயம் செய்திருந்த பிரதம நீதியரசர் சரத் என். சில்வா நீதிமன்ற வளாகத்திற்கான அடிக்கல்லை நாட்டியதுடன் இந் நினைவு நடுக்கல்லினைத் திரை நீக்கம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

### அரசு...

அநுரகுமார திசநாயக்க ஆகியோரும் இடம்பெற்றார்கள். புதுடில்லி விமான நிலையத்தை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நேற்றிரவு சென்றடைந்தபோது இந்திய வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் அவரை வரவேற்றார்கள். இதன்போது இந்தியாவிற்கான இலங்கைத் தூதுவர் மங்கள முனசிங்கவும் பிரசன்னமாகி இருந்தார். நேற்றுக் காலை இந்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினார். இந்த சந்திப்பு 11.30 மணியளவில் புதுடில்லியில் உள்ள ஒபராய் ஹோட்டலில் நடைபெற்றது. இதன்போது வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, விவசாய அமைச்சர் அநுரகுமார திசநாயக்க ஆகியோரும் பங்குபற்றியிருந்தார்கள். சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை இடையிலேயே தடைப்பட்டமை தங்களுக்கு வருத்தத்தை தந்தது எனவும் இந்த பேச்சுவார்த்தைகள் தொடங்க வேண்டும் என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் இந்திய நிதியமைச்சர் சிதம்பரம் கூறியுள்ளார். நோர்வே இந்தப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முயற்சிகளை எடுத்து வருவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தன்னிடம் கூறியதாகவும் இந்திய நிதியமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இந்திய விவசாய அமைச்சர் சரத்பவார் வீதிப் போக்குவரத்து அமைச்சர் ரி.ஆர்.பாலு ஆகியோரைச் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது.

இன்று அவர் காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியாகாந்தி பிரதமர் மன்மோன்சிங், பாதுகாப்பு ஆலோசகர் ஜே.என்.டிக்சிற் ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

### கரும்புலிகள்...

அனுமதி வழங்கப்பட்டதாக குற்றஞ்சாட்டி பாடசாலை நிர்வாகத்தையும், வடமராட்சி கல்வித் திணைக்கள நிர்வாகத்தையும் நேரில் சென்று அச்சுறுத்தியுள்ளனர்.

இதனிடையே போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலக பிரதிநிதிகள் அப்பகுதியைச் சேர்ந்த உள்ளூராட்சி நிர்வாகத்திடம் கட்டட நிர்மாணத்திற்கான முன் அனுமதி பெறப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டிருந்ததாகவும் தெரியவருகிறது. (27)

### வவு....

குப் பாதுகாப்பு இல்லை என்று கூறிப் போராட்டம் நடத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்றைய பிரச்சினை தொடர்பாக ஆராய வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கல்லூரிக்குச் சென்றிருந்தார். (21)

### யுத்தத்தை...

யைத் தொடங்க லாமா? இராணுவத்தை எப்படிப் பயன்டுத்துவது என்ற முடிவு எடுக்கமுடியாத ஒருவித பதட்டநிலையில் அரசாங்கம் தற்போது இருக்கிறது.

சண்டை ஆரம்பிப்பது எமது கையில் இல்லை. சண்டையைத் தொடர்வதா? இல் லையா? என்பதை முடிவு செய்வது சந்திரிகா தான். எங்கள் தலைவர் சமாதானம் மூலம் தீர்வு காணவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். எமது தலைமை சண்டையை விரும்பவில்லை. மாறாக சமாதானத்தைத் தான் விரும்புகிறது என அவர் மேலும் கூறினார்.

இச் செவ்வி 5-ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

### பாரம்பரிய...

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் ஏற்றி வைத்தார்.தொடர்ந்து சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மாவீரர்களின் திருவுருவப் படங்களிற்கு சுடர் ஏற்றி மலர் மாலை அணிவிக்கப்பட்டது.

இதில் கடற்கரும்புலி லெப். கேணல் சுதர்சனின் உருவப்படத்திற்கு மாவீரரின் தந்தையாரும் கடற்புலி மேஜர் பதுமனின் உருவப்படத்திற்கு தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் அவர்களும் கடற்புலி மேஜர் கண்ணபிரானின் உருவப்படத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினமும், கடற்கரும்புலி மேஜர் பார்த்தீபனின் உருவப்படத்திற்கு முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தனும், மேஜர் சுடரொளியின் உருவப்படத்திற்கு மூன்று மாவீரர்களின் தாயார் திருமதி பொன்.தியாகமும், மேஜர் செல்லப்பிள்ளையின் உருவப்படத்திற்கு முல்லை காவல்பணிமனைப் பொறுப்பாளர் குணேஸ்வரனும், மேஜர் மிதுபாலனின் உருவப்படத்திற்கு புலிகளின்குரல் நிறுவனப்பொறுப்பாளர் தமிழன்பனும், கப்டன் சுகந்தனின் உருவப்படத்திற்கு அரசியல்துறை நிர்வாகப்பொறுப்பாளர் சீராளனும் (அம்பி) சுடர் ஏற்றி மலர் மாலை அணிவித்தனர்.

தொடர்ந்து முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச பொதுமுகாமையாளர் தலைமையில் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. தலைமையுரை வரவேற்புரை என்பவற்றைத் தொடர்ந்து சிறப்புரையை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம். கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஆகியோர் நிகழ்த்தினர். சிறப்புரையைத் தொடர்ந்து தீப நடனம்,கடற்புலி மகளிர் அணிப் போராளிகளின் நாடகம், பண்டாரவன்னியன் நாடகம், சங்கநாதம் பாடலும் ஆடலும் போன்ற பல்வேறு கலைநிகழ்வுகள் நடைபெற்றன. நன்றியுரையைத் தொடர்ந்து நள்ளிரவுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தன. மேற்படி நிகழ்வில் பெருமளவானோர் கலந்து கொண்டனர். (லோ.ச)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.